விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 185 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 08 திங்கட்கிழமை (22.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பொது மன்னிப்பு வழங்கினால் செம்மணி தொடர்பில் வாய் திறப்பேன்

### சோமரத்ன ராஜபக்ஷ அரசுக்கு நிபந்தனை

(கொழும்பு)

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தனக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டால் மேலும் பல உண்மைகளை வெளிப்படுத்தத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார். (15 ஆம் பக்கம் பார்க்க)



### ஐ.எம்.எப் குழுவினர்

## நாளை மறுதினம் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர்கள் குழு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு 15ஆம் பக்கம் பார்க்க

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

இதற்கமைய, கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதி 15ஆம் பக்கம் பார்க்க


## எரிபொருள் விலையை குறைக்காத அரசாங்கம்

### நாமல் எம்.பி காட்டம்

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்தாலும் தேசிய மட்டத்தில் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தயார் நிலையில் இல்லை எனப் பொதுஜன 02ஆம் பக்கம் பார்க்க

## சீமான் - சிறீதரன் எம்.பி இடையே கலந்துரையாடல்



(சென்னை)


தமிழ் நாட்டிற்குச் சென்றுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் 02ஆம் பக்கம் பார்க்க

# செம்மணி மனிதப் புதைகுழி 400 ஐ தாண்டியது

### 9 மனித என்புக் கூடுகள் நேற்றுக் கூட்டாக அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை நேற்றுடன் 400 ஐத் தாண்டியுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)



## விசேட அதிரடிப்படையினருடன் முரண்பட்ட பொதுமக்கள்

### கிளி. உமையாள்புரத்தில் களேபரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் விசேட அதிரடிப்படையினருடன் முரண்பட்ட 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் இடம் பெற்ற சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் 02ஆம் பக்கம் பார்க்க

## உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி ஆகஸ்ட் 10 இல் இடம்பெறும்

(கொழும்பு)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்கான திகதிகளை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

திட்டமிட்டபடி ஆகஸ்ட் 10ஆம் திகதி உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவகம் வெளியிட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைய உயர் 02ஆம் பக்கம் பார்க்க


## நீதியரசர்களை நியமிக்க பின்னிற்கும் அரசாங்கம்

### எதிர்வினையாற்ற தயாராகும் எதிரணி

(கொழும்பு)

நீதியரசர்கள் நியமனத்தை அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்கின்ற நிலையில், அது தொடர்பில் எதிர்வரும் பாராளுமன்றக் கூட்டத்தொடரில் அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு 15ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்கா - ஈரான் பேச்சுவார்த்தையில் பாரிய முன்னேற்றம்



02ஆம் பக்கம் பார்க்க

## சிறுபான்மையினர் என்ற நினைப்பிற்கு இனி இடமில்லை

### திருவாய் மலர்ந்த திலித் ஜயவீர



(கொழும்பு)

இந்நாட்டில் வாழும் எந்த ஒரு சமூகத்தைச் சேர்ந்த மக்களும் எவ்வித காரணத்திற்காகவும் தாங்கள் இந்த நாட்டில் சிறுபான்மையினர் 02ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறாது நேர்மை காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறுபான்மை...

என நினைப்பதற்கு இட மளிக்கப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

நாட்டின் எதிர்காலச் சந்ததி யினரின் நலனுக்காகவும் இளைஞர் யுவதிகளின் முன் னேற்றத்திற்காகவும் உண்மை யானதும் நேர்மையானது மான ஒரு சமூக ஒருமைப்பாடு அவசியமானது.

டொலர்களை அடிப்படை யாகக் கொண்ட கூட்டணி களோ, அரச சார்பற்ற நிறு வனங்களின் கூட்டணிகளோ அல்லது தேர்தல்களில் வாக்கு களைப் பெற்றுக் கொள்வதற் காக தற்காலிகமாக அமைக் கப்படும் கூட்டணிகளோ நாட் டுக்குத் தேவையில்லை.

மாறாக, மக்களின் உண்மை யான தேவைகளை உணர்ந்த ஒரு சர்வஜன கூட்டணியே இன்றைய தேவையாகும் என் றார். (ந-7)

## உயர்தரப்...

தர மாணவர்களுக்கான பாடத் திட்டங்களை நிறைவு செய்வ தற்கு 300 நாட்கள் தேவைப் படுகின்றன.

இம்முறை உயர்தரப் பரீட் சைக்குத் தோற்றவுள்ள மாண வர்களுக்கான கல்வி நட வடிக்கைகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து எதிர்வரும் ஆகஸ்ட் 7ஆம் திகதி வரை யான காலப்பகுதியில் 343 நாட்கள் பாடசாலை தினங்க ளாகக் காணப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாவது மற்றும் மூன்றா வது தடவையாகத் தோற்ற வுள்ள மாணவர்களுக்கு, கடந்த பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகிய திகதியிலிருந்து இம்முறை பரீட்சை நடை பெறும் திகதி வரையான கால இடைவெளி 4 மாதங்களும் 10 நாட்களுமாகும்.

அதற்கமைய உயர்தரப் பரீட்சைக்குத் தயாராவதற் குத் தேவையான காலம் வழங் கப்பட்டுள்ளமையினால், பரீட்சைத் திகதிகளை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை யெனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ந-7)

# ரயில் - மோ.சைக்கிள் விபத்து
# தந்தை, மகன் உயிரிழப்பு

(கந்தானை)

கந்தானைப் பகுதியில் இடம்பெற்ற ரயில் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பய ணித்த தந்தை, மகன் ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற மகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில்,

மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் பயணித்த தந்தை, மிக மோசமான நிலை யில் ராகமை போதனா வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகப் பொலி ஸார் தெரிவித்தனர். (ந-7)

## எரிபொருள்...

பெரமுனவின் தேசிய அமைப் பாளரும் பாராளுமன்ற உறுப் பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற் றுக்கிழமை (21) நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது,

எரிபொருளுக்கு மானியம் வழங்கப்படுவதாக அரசாங் கம் குறிப்பிட்டாலும், எரி பொருள் விலைச்சூத்திரம் தொடர்பான உண்மை விப ரங்கள் இதுவரையில் வெளி யிடப்படவில்லை. ஒவ்வொரு மாதமும்முறையான வழிமுறை களுமின்றி எரிபொருள் விலை அதிகரிக்கப்படுகிறது.

கடந்தகால அரசாங்கங் களையும் அரசியல்வாதிகளை யும் விமர்சித்துக் கொண்டி ருக்காமல், நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் நடவடிக்கை களை அரசாங்கம் முன்னெ டுக்க வேண்டும் என்றார். (ந-7)

## சீமான்...

சிறீதரன், நாம் தமிழர் கட்சி யின் தலைமை ஒருங்கிணைப் பாளர் சீமானை அவரது இல் லத்தில் சந்தித்துக் கலந்து ரையாடினார்.

நட்புறவு அடிப்படையில் இடம் பெற்ற இந்தச்சந்திப்பின் போது, பல்வேறு விடயங்கள் தொடர் பாக இருவரும் கருத்துக்க ளைப் பகிர்ந்து கொண்டதா கத் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)

## அமெரிக்கா...

சுவிட்சர்லாந்தின் பர்கன்ஸ்டாக் நகரில் கட்டார் மற்றும் பாகிஸ் தான் ஆகிய நாடுகளின் மத்திய ஸ்தத்துடன் நடைபெற்ற அமெ ரிக்கா - ஈரான் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தையின் முதல் சுற்றில் முன்னேற்றம் ஏற் பட்டுள்ளது.

முதல் சுற்று பேச்சு வார்த்தை களின் பின் கருத் துரைத்த அமெ ரிக்க துணை அதிபர் ஜேடி வான்ஸ், இந் தப் பேச்சுவார்த் தையில் மிகப் பெரிய முன்னேற் றம் ஏற்பட் டுள்ள தாகவும், எதிர் காலத்தில் இரு நாடுகளும் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளதாகவும் தெரி வித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் லூசெரன் ஏரிக்கு அருகில் அமைந் துள்ள பர்கன்ஸ்டாக் ரெசார்ட் டில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் பாகிஸ் தான் மற்றும் கட்டார் நாடு களின் பிரதமர்களும் கலந்து கொண்டிருந்தனர். (ந-7)




2026ஆம் ஆண்டுக்கான வட மாகாண பாடசாலைகளுக் கிடையிலான கடற்கரை கரப்பந்தாட்ட போட்டியில் தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட காரைநகர் வியாவில் சைவ வித்தியாலத்தின் 17 வயதுப் பெண்கள் பிரிவு முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்று சாதனை படைத்துள்ளது.

சென்ற வருடத்திலும் மேற்படிப் பாடசாலையானது மாகாண மட்டப் போட்டிகளில் 40 புள்ளிகளை தீவக கல்வி வலயத்துக்காகப் பெற்றுக் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விசேட...

நோக்கில் சம்பவ இடத் திற்கு விஜயம் செய்த விசேட அதி ரடிப்படையினர் காட்டுக்குள் உழவு இயந்திரத்துடன் ஒரு வரைக் கைது செய்ய முற் பட்டனர். அப்போது அப்பகுதி மக்களுக்கும் விசேட அதிரடிப் படையினருக் கும் இடையே முறுகல் ஏற் பட்டது.

இதன்போது கைது செய் யப்பட்டவரின் உறவினர்கள் விசேட அதிரடிப் படையின ரைத் தாக்கியதாகவும், இத னால் விசேட அதிரடிப்படை யினர் சம்பவத்தில் ஈடுபட்டு அனைத்து தரப்பினரையும் கைது செய்து கிளி நொச்சி நீதிமன்றில் நேற்று ஞாயிற் றுக்கிழமை முற்படுத்திய நிலையில் அவர்களை இன்று திங்கள் வரை விளக்கமறிய லில் வைக்க நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 14 பேரில் பாடசாலை மாணவர் களும் அடங்குவதாகத் தெரி விக்கப்படுகிறது. (ந-7,316)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளி நொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5894)

076 825 7716 (ஆகாஸ்)



**வீட்டு வேலைக்கு பணிப்பெண் (Housemaid) ஒருவர் தேவை**

தேவைகள் (Requirements):

- இடம் : நெல்லியடிப்பகுதி (வடமராட்சி)
- வயது : 40-60 வயதுக்குள் இருக்க வேண்டும்.
- மாலை 7.00 மணி வரை வேலை செய்யக்கூடியவராக இருக்க வேண்டும்.
- சம்பளம் மற்றும்ஏனைய விபரங்கள்பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
074 073 7596 (Call/ WhatsApp) (C-5893)



**வீடு விற்பனைக்கு**

நாவாந்துறை சனிக்கிளான் கோயில் ஒழுங்கையிலிருந்து
100m தூரத்தில் ஒரு பரப்பிற்கு ஒரு குளி குறைவு
(17.8 குளி) கொண்ட காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு : 077 163 4305 (7897)



**கண்ணீர் அஞ்சலி**



வடமராட்சி வடக்கு பருத்தித்துறை
பிரதேச செயலர் திரு. நடராசா திருலிங்கநாதன்
அவர்களின் பாசமிகு தாயார்

**அமரர் நடராசா தெய்வானைப்பிள்ளை**

தோற்றம் 09.07.1932 மறைவு 21.06.2026

அவர்கள் காலமான செய்தி அறிந்து
ஆழ்ந்த துயரமடைவதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை. (C-5889)



**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 24.05.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வம்

**அமரர் திருச்செல்வம் நீலாதேவி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 23.06.2026 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு தெணி அம்மன் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்

மணல் வீதி,
புலோலி மேற்கு, பருத்தித்துறை. (C-5892)

தகவல்: குடும்பத்தினர்
தொ.இ: 076 054 2146


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று இலங்கை வருகிறார்
### அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர்



(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் போல் கபூர், இன்று திங்கட்கிழமை இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட உள்ளதுடன் கொழும்பு துறைமுகத்திற்கும் செல்ல உள்ளார்.

கடந்த மாதம் அமெரிக்காவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கடலோரக் காவல் கப்பலை ஒப்படைக்கும் விழாவில், அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்பின் சிறப்புத் தூதராக செர்ஜியோ கோர் கலந்துகொள்ள திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், அவர் கடைசி நேரத்தில் அந்த நிகழ்வைத் தவிர்த்திருந்தார். இவ்வாறானதொரு நிலையில், போல் கபூரின் இந்த வருகை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின் பின்னர், அவர் கொழும்பு துறைமுகத்திற்கு நேரடி கள ஆய்வுப் பயணம் ஒன்றை மேற்கொள்ள உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

## சித்திரவதைகளைத் தடுக்கும் ஐ.நாவின் இரகசிய அறிக்கை
### பகிரங்கப்படுத்தப்படுமா?

(கொழும்பு) ..........

**ஐக்கிய நாடுகள் சித்திரவதைத் தடுப்புக்கான குழு இலங்கையில் முகாமமைத்திருக்கும் நிலையில் அதன் அறிக்கை 2019 ஆண்டறிக்கை போல முடக்கப்படுமா அல்லது பகிரங்கப்படுத்தப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.**



இலங்கைக்கு ஒன்பது நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகளின் சித்திரவதைத் தடுப்புக்கான உப குழுவின் பிரதிநிதிகள் தமது கள ஆய்வுகளின் அடிப்படையிலான இரகசிய முதற்கட்ட அவதானிப்பு அறிக்கையை இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளனர்.


கடந்த ஜூன் 15 ஆம் திகதி இலங்கை வந்தடைந்த நான்கு உறுப்பினர்களைக் கொண்ட இந்தக்குழுவினர், நாடளாவிய ரீதியிலுள்ள சிறைச்சாலைகள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு திடீர் விஜயங்களை மேற்கொண்டு கைதிகளின் நிலைமைகளை ஆராய்ந்ததுடன், தங்களது விஜயத்தை எதிர்வரும் புதன்கிழமை நிறைவு செய்யவுள்ளனர்.

2019 ஆம் ஆண்டு விஜயத்திற்குப் பின்னர், சித்திரவதைகளைத் தடுப்பதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்து மதிப்பிடுவதே குறித்த குழுவினரின் முக்கிய நோக்கமாகும்.

இதன் ஒருகட்டமாக, வெளிவிவகார அமைச்சில் கடந்த வாரம் விசேட உயர் மட்டக் கலந்துரையாடலொன்று நடைபெற்றது. இதில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிவிப்பின்படி, சித்திரவதைகளுக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கையின் 16 ஆவது பிரிவுக்கு இணங்க, இந்த முதற்கட்ட அவதானிப்புகள் இலங்கை அரசாங்கத்திற்கும் தேசிய தடுப்பு பொறிமுறைக்கும் இரகசியமான முறையில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து, விரிவான பரிந்துரைகளை உள்ளடக்கிய இறுதி அறிக்கையை இக்குழுவினர் தயாரிப்பார்கள். எனினும் சர்வதேச விதிகளின்படி, இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்தால் மட்டுமே குறித்த குழுவின் இறுதி அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் என்பதுடன், கடந்த 2019 ஆம் ஆண்டு இலங்கைக்கு மேற் கொண்ட விஜயத்தின் பின்னரான அறிக்கையும் இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)



யாழ்ப்பாணம் - நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோவில் வருடாந்த சிவன் மஹோற்சவ தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.
(படங்கள்- ஐ.சிவசாந்தன்)

## பருவநிலை மாற்றத்தால் 1.8 பில்லியன் குழந்தைகள் ஆபத்தில்

(கொழும்பு)

பருவநிலை மாற்றத்தின் தீவிர விளைவுகளால் உலகெங்கிலும் உள்ள குழந்தைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருவதாக UNICEF வெளியிட்டுள்ள புதிய அறிக்கை எச்சரித்துள்ளது.

உலகளவில் சுமார் 1.8 பில்லியன் குழந்தைகள் வறட்சியினாலும். 1.2 பில்லியன் குழந்தைகள் கடுமையான வெப்ப அலையினாலும் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டில் மட்டும், பருவநிலை விபரீதங்களால் 85 நாடுகளில் 242 மில்லியன் குழந்தைகளின் கல்வி தடைப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் உலகளாவிய வானிலையை மாற்றி அமைக்கும் "சுப்பர் எல் நினோ" தாக்கம் வரவிருக்கும் மாதங்களில் உணவு உற்பத்தியை அச்சுறுத்தக்கூடும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இருப்பினும், கடந்த ஆண்டுகளில் உலகளவில் அரிசி மற்றும் இதர தானியங்கள் சாதனை அளவில் அறுவடை செய்யப்பட்டு சேமிப்பில் உள்ளதால், உணவுப் பற்றாக்குறை ஆபத்து சற்றுக் குறைந்துள்ளதாக ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது. (8)

## திறைசேரியால் செலுத்தப்பட்ட டொலர் மோசடி விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை
### பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவிப்பு



(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் ஏற்றுமதி நிறுவனத்துக்கு திறைசேரியால் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் டொலர் மூன்றாம் தரப்பினரால் மோசடி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என்று நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

2.5 மில்லியன் டொலர் மூன்றாம் தரப்பினரால் மோசடி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பான விசாரணைகள் இதுவரையில் நிறைவடையவில்லை. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த விவகாரம் குறித்து தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கொழும்பு வாணிப மேல் நீதிமன்றத்துக்கு "பி" அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றார். (8)

## பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குங்கள்!
## லண்டனில் அமைதிப் போராட்டம்

(லண்டன்)

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் நீதியை வலியுறுத்தியும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் கடுமையான பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் **இணையப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றை உடனடியாக நீக்க வலியுறுத்தியும் லண்**டன் நகரில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன்பாக, அமைதிப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

"தமிழீழ சுயநிர்ணய அமைப்பு", "சர்வதேச நீதிக்கான தமிழீழ மக்கள் சங்கம்" மற்றும் பல தமிழ் தேசிய அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான தமிழர்கள், தமிழீழத் தேசியக் கொடிகளையும், கோரிக்கை பதாகைகளையும் ஏந்தியவாறு, "நீதியும் சுயநிர்ணயமும் தமிழீழத்திற்கே!" என்ற ஒற்றை முழக்கத்தை முன்வைத்து தங்களது கண்டனங்களையும் கோரிக்கைகளையும் வெளிப்படுத்தினர்.




"எங்கள் நிலம், எங்கள் மக்கள், எங்கள் உரிமை" என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு இளையோர் முதல் முதியோர் வரை பெருந்திரளான மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# மாகாணமட்ட கராத்தே போட்டி யாழ்.வீரர்கள் சாதனை




பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட கராத்தே சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்ட வீரர்கள் சாதனை படைத்துள்ளனர்.

2026 இற்கான பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட கராத்தே சுற்றுப்போட்டி கடந்த 6,7 ஆம் திகதிகளில் யாழ். அருணோதயா கல்லூரியில் நடைபெற்றது. குறித்த போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியினர் 12 பதக்கங்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அத்துடன் கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி பொது உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற போட்டியில் பங்கு கொண்ட வி.தமிழ் நிலவன் மூன்று போட்டிகளிலும் ஜகாட்டா, குமித்தே, குழுக்காட்டா ஆகிய போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்று மாகாணத்தில் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர்களது பயிற்சி ஆசிரியர் றென்சி.சி. விஜயராஜ் என்பது குறிப்பிடத்தக்கது. (3)





யாழ்ப்பாணம் வலிகாமம் தெற்கு பிரதேசத்தின் ஏழாலை புனித இசிதோர் முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா-2026 நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏழாலை புனித இசிதோர் தேவாலய வளாகத்தில் தேவாலயப் பங்குத் தந்தை அருட்பணி. மைக்கல் முத்து நிக்சன் கொலின் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. (படம்:மகாலிங்கம்)

# ஆண்களுக்கான கால்பந்து நெல்லியடி மத்திய கல்லூரி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்து வரலாற்றுச் சாதனையை பதிவு செய்துள்ளது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

16 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ் மத்திய கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்த போதிலும் நெல்லியடி மத்திய கல்லூரி அணியினர் தமக்கு கிடைத்த பல வாய்ப்புகளை கோலாக்க தவறினர்.

நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர் கிருஷாண் மிகச் சிறப்பான கோலைப் பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்தில் யாழ் மத்திய கல்லூரி அணியினர் ஆட்டத்தில் விறுவிறுப்பை காட்டினர். இருப்பினும் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர் கிருஷாண் கொடுத்த பந்தை வகின்சன் கோலாக்க ஆட்ட நேர முடிவில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.


நெல்லியடி மத்திய கல்லூரி அணி முதலாவது போட்டியில் மன்னார் இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலயத்தை 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிளிநொச்சி மத்திய கல்லூரி அணியுடனான போட்டியில் தண்டனை உதை மூலம் வெற்றி பெற்று, காலிறுதி ஆட்டத்தில் வயாவிளான் மத்திய கல்லூரி அணியை தண்டனை உதை மூலம் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றனர்.

அரையிறுதி ஆட்டத்தில் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திலும் யாழ் மத்திய கல்லூரி அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச்




# மாகாணமட்ட பளுதூக்கல் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு தங்கம், வெண்கலப் பதக்கங்கள்





யாழ் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற மாகாண மட்ட பளுதூக்கல் போட்டியில், யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவர்கள் சிறப்பான சாதனைகளைப் படைத்து கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

கு.நிதர்சனா அவர்கள் 20 வயதிற்குட்பட்ட 81 கிலோ எடைப் பிரிவில் 70 கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

அத்துடன் சி. பிரசாத் அவர்கள் 17 வயதிற்குட்பட்ட 49 கிலோ நிறைப் பிரிவில் 90 கிலோ எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இருவரும் தங்களது சிறப்பான திறமைகளை வெளிப்படுத்தி தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை அச்சுறுத்தும் சமூக ஊடகங்கள்

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

**சமூக ஊடகங்கள் மற்றும் பல்வேறு தகவல் தொடர்பு சாதனங்கள் ஊடாக பெண்களை இலக்கு வைத்து நடத்தப்படும் பணப் பறிப்பு, சொத்துக் கொள்ளை மற்றும் கொலைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் பொதுமக்களுக்கு விசேட விழிப்புணர்வு அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளனர்.**

திருமணம் செய்து கொள்வதாக போலியான வாக்குறுதிகளை வழங்கி பெண்களை ஏமாற்றும் சம்பவங்கள் அண்மைக் காலமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பதிவாகியு ள்ளன.

உணவு அல்லது பானங்களில் மயக்க மருந்து கொடுத்து, பெண்களை நினைவு இழக்கச் செய்து தவறான நடத்தைகளுக்கு உட்படுத்துவதும், அவர்களின் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதும் பரவலாகக் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே இணையம் அல்லது சமூக ஊடகங்கள் மூலம் அறிமுகமாகும் அடையாளம் தெரியாத நபர்களை நம்பி பணம், நகைகள் அல்லது மதிப்புமிக்க சொத்துக்களை வழங்க வேண்டாம் என பெண்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை இலக்கம், வங்கி கணக்கு இலக்கம், முகவரி போன்ற இரகசியத் தகவல்களை அந்நியர்களிடம் பகிர்வதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய ஏமாற்று வேலைகளுக்கு அல்லது அச்சுறுத்தல்களுக்கு ஆளாகியிருந்தால், உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அல்லது சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்திற்கு சென்று முறைப்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி 118 / 119 / 107 / 109 ஆகிய அவசரத் தொலைபேசி இலக்கங்கள் மூலமும் பொலிஸாரைத் தொடர்பு கொள்ள முடியும். (8)

# சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 6 இடங்களில் கண்காணிப்பு கமராக்கள்

## சாவகச்சேரி நகரசபை அதிரடி தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களில் ஆறு இடங்களில் கண்காணிப்பு கமராக்களைப் பொருத்த சாவகச்சேரி நகர சபை தீர்மானித்திருப்பதாக நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், பொது இடங்களில் கழிவுகளைக் கொட்டுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என சாவகச்சேரி நகர சபை தொடர்ச்சியாகக் கூறி வருகின்ற போதிலும், மக்கள் அது தொடர்பில் எந்தவிதமான பொறுப்பும் இன்றி செயற்பட்டு வருவதால், இனங் காணப்பட்ட ஆறு இடங்களில் கண்காணிப்பு கமராக்களைப் பொருத்தி, பொது இடங்களில் கழிவுகளைக் கொட்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சாவகச்சேரி நகரசபை தீர்மானித்துள்ளது.

தற்போது எமது சபை எல்லைக்குள் டெங்கு அபாயம் தலைதூக்கியுள்ளது. டெங்கு அபாயத்திலிருந்து எமது பிரதேசத்தை மீட்க, வீடுகள் தரிசிக்கப்படுகின்றது. மக்கள் ஒத்துழைக்காத பட்சத்தில் டெங்கு நோயை அழிக்க முடியாது. எனவே, மக்களுடைய ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது.

பொதுமக்கள் தமது காணிகளைத் துப்பரவாக வைத்திருப்பதுடன், பொது இடங்களில் குப்பைகளைக் கொட்டுவதனையும் தவிர்க்க வேண்டும். பொது இடங்களில் குப்பைகளைக் கொட்டுவதால், பல்வேறு அசௌகரியங்களுக்குப் பலரும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாகப் பல தடவைகள் நாம் அறிவித்த போதிலும், குப்பைகளைக் கொட்டுபவர்கள் பொறுப்பின்றித் தொடர்ந்தும் அதனைச் செய்த வண்ணமே உள்ளார்கள்.

எனவே தான், சபை தீர்மானத்திற்கு அமைவாக இனம் காணப்பட்ட ஆறு இடங்களில் கண்காணிப்பு கமராக்களைப் பொருத்தி, கழிவுகளை வீதிகளில் மற்றும் பொது இடங்களில் வீசுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் நிச்சயமாகப் பொது இடங்களின் சுத்தத்தைப் பேண முடியும் என நாம் நம்புகின்றோம் என தெரிவித்தார். (8-30)

# வவுனியா நொச்சிமோட்டை கனிஸ்ட உயர்தர வித்தியாலயத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் ஆரம்பித்து வைப்பு



(வவுனியா)

வவுனியா, நொச்சிமோட்டை கனிஸ்ட உயர்தர பாடசாலையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் நேற்றையதினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சமூதாய மேம்பாட்டு சேவை அடிப்படையாக ஒவ்வொரு வருடமும் 16 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது அந்தவகையில் இந்த வருடத்துக்கான ஐந்தாவது திட்டமாக வவுனியா வடக்கு வலயத்தின் நொச்சிமோட்டை கனிஸ்ட உயர்தர வித்தியாலய மாணவர்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக சிஜசி விவசாய வியாபார நிறுவனத்தின் சமுதாய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 13 இலட்சம் ரூபாய் நிதி உதவியில் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் சிஜசி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் வருண மடவனாராச்சி, வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபன், மற்றும் பாடசாலை அதிபர், வவுனியா வடக்கு வலயக்கல்வி திணைக்களத்தினர், சிஜசி குழுமத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8-250)

# கியூ.ஆர் குறியீட்டு முறைமை தொடர்ந்தும் அமுல்படுத்தப்படும்



(கொழும்பு)

எரிபொருள் விநியோகத்திற்காகப் பயன்படுத்தப்படும் கியூ.ஆர் குறியீட்டு முறைமை நீக்கப்படமாட்டாது என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் நுகர்வைத் தொடர்ந்து திறம்பட நிர்வகிக்கும் நோக்குடனேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் டி.ஏ. ராஜகருண குறிப்பிட்டுள்ளார். அத்துடன், உலக சந்தையில் எரிபொருள் விலைகள் தொடர்ந்து ஏற்ற இறக்கங்களைச் சந்தித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 200 | -- | 220 |
| பச்சைமிளகாய் | 600 | 480 | 500 | 690 | 700 |
| தக்காளி | 850 | 800 | 800 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 250 | 150 | 200 |
| கோவா | 250 | 280 | 350 | 250 | 250 |
| கரட் | 400 | 450 | 500 | 450 | 400 |
| பூசணி | 120 | 140 | 150 | 100 | 150 |
| புடோல் | 200 | 150 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 120 | 140 | 100 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 300 | 500 | 450 |
| பெரிய வெங்காயம் | 200 | 240 | 200 | -- | 200 |
| பாகற்காய் | 1500 | 2000 | 1500 | 2000 | 2000 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 300 | 400 | 400 |
| பயற்றங்காய் | 700 | 600 | 600 | 700 | 600 |
| லீக்ஸ் | 400 | 450 | 400 | 400 | 400 |
| பீற்றூட் | 450 | 400 | 400 | 450 | 500 |
| கறிமிளகாய் | 450 | 600 | 600 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 2000 | 2000 | 2000 | 1500 | 1700 |
| போஞ்சி | 700 | 600 | 600 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 200 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 50 | 80 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 460 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 110 | 100-140 |
| இராசவள்ளி | 350 | 450 | 350 | 350 | 350 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 500 | 420 | 500 |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 180 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | -- | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | -- | 120 |
| [illegible] | -- | -- | 120 | -- | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறுபோக உரமானியம்

# 90 விகிதம் நிறைவு

## விவசாய அபிவிருத்தித் திணைக்களம்



**(கொழும்பு)**

**சிறுபோக உரமானியம், 90 சத வீதமான விவசாயிகளுக்கு ஏற்கனவே வழங்க ப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள விவசாயிகளுக்கான உரமானியத் தொகையும் கூடிய விரைவில் அவர்க ளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வைப்புச் செய்யப்படும் என விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தம்மிகா ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் கருத்திற் கொண்டு, அரசாங்கத்தால் வழங்கப்படும் உரமானியத் தொகை இந்த முறை 5ஆயிரம் ரூபாயினால் உயர்த்தப்பட்டுள்ளது.

ஒரு ஹெக்ரேயருக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்க ப்பட்டது.


தற்போதைய அதிகரிப்பின் படி, ஒரு ஹெக்ரேயருக்கு 30ஆயிரம் ரூபாய் உரமானிய மாக வழங்கப்படுகிறது.

இந்த உரமான்யத் தொகை யானது எவ்வித தவணைக் கட்டணங்களும் இன்றி, ஒரே தடவையில் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (8)

# யாழில் இடம் பெற்ற யோகாதின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இந்திய துணை தூதரகத்தின். ஏற்பாட்டில் துணைத் தூதரக தூதுவர் சாய் முரளியின் தலைமையில், யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை யோகா தின நிகழ்வுகளும் யோகாசன கலைகளும் இடம்பெற்றன.



யாழ் மாவட்டத்திலுள்ள 2500 இற்கு மேற்பட்ட யோகாச ன மாணவர்கள் இந்த நிகழ் வில் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தி னர்.

நிகழ்வில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு சான்றி தழ்களும் இந்திய துணை தூதரகத்தினால் வழங்கி வைக்கப்பட்டது. (8-33)

# நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30மணிக்கு பாவலர் துரையப்பா பிள்ளை மண்ட பத்தில் நடைபெறும்

கல்லூரி அதிபர் இ.புஸ்பர ட்ணம் தலைமயில் நடை பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மூத்த தொழில் நுட்ப ஆலோசகர் கலாநிதி பா.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் நினைவுப் பேரு ரையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரை யாளர் நா.அம்பிகை பாகன் ஆசியுரையை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் செஞ் சொற் செல்வர் கலாநிதி. ஆறுதிருமுகன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (8)





இணுவில் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படம் : சிவகாந்தன்)

# சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்- 2025

## யா/இந்துக் கல்லூரி

**9ஏ**

ஆங்கிலமொழி

எ.கிஷானன், பி. அகிலேஷன்,பி.ரஷ்விந்,ஜெ. கேதுஷன், ஜெ.லக்ஷயன், கே.ஆரூரன், கே.தர்சன்,கே.திருவரங்கன், கே.வித்தஹறன்,எம். பிரஜித், எம்.சதுஷிகன், எம்.தருண்ராஜ், எம்,கோகணன், ஆர்.பிரவீன், ஆர்.ஜதுஷயன், எஸ்.லோஹித், எஸ்.குருபரன், எஸ்.பிரணவன், எஸ்.ஹம்சிகன் , எஸ்.மேசிகன், ரி. ஆருத்தன், வை. எழிலன், எ. அபிலக்ஷன், எ. அக்ஷரன், பி. தனுபன், கே. சரவணப்பிரியன், எம். அஷ்வின்,எம். கஜவர்ஷன், ஆர்.ஆதிரியன்,எஸ். துவாரகன், எஸ்.அஷ்வின், எஸ்.அட்ஷயன், எஸ்.பிரகாஸ், எஸ்.பானுஜன், எஸ்.ஆகர்சித், வை. திவானுஜன்,வை.சர்வின், வை.ஆருஷன்,

தமிழ் மொழி

கே.கர்வண்ணன், எம்.பவிதிரன், எம்.கபிலன்,யு.டிலான், ஜி.றுக்ஷனன், ஜெ.விகர்னன், ஜெ. அஜய், எம். டனுஷ்ரிகன், எஸ். சாருஜன், கே. கார்த்திகன்,என். அபினாஷ், பி. ஆருஷனன், எஸ்.கயலவன், கே. பரிஜன், எம்.கிருஷிகன், எம்.லக்ஷின், எம்.பவித்ரன், என்.மக்ரயன், என்.நிருக்ஷன், பி.தஸ்வின், ஆ.நிஹாசன்,எஸ்.மிதரேஷ், எஸ்.மிதுர்னன், வி.ஹரிஷ்ராம், எ.பிரதாபன், ஐ.செந்தேன், ஜெ. ஜோயல்ஷன், கே. அஜத்மிஹறன், கே.மதுஜனன், எம். அபிவர்னன், என். லதாகன், பி.லிஷன், ஆர். சுஜனன், எஸ். ஷாயின்,எஸ்.மாரூரன்,எஸ். கிஷோக், ரி. பிரவீன்,வி.ஹரிசன், வி.கோகுலவனன், என்.அஜாஹறன், ஆர்.அபூர்வன்,ரி.விதுஷன்,வி. மேஹவன்.

**8ஏபி**

ஆங்கிலமொழி

ஜெ.அனுஷன், ஜெ.அதிதியன்,ஜெ.சரண்ஜென்,கே.சஜீவ், எம்.அருஷன், பி. ஆருஜன்,வி.டினுஷாந், பி.ஸ்வேதன், கே.டிஷான், பி.ஷேசிகன், எஸ். ரேனுபவன், எஸ். கஜானன், எஸ். அபினபன்,

தமிழ்மொழி

எ.ஹிஷால், எம். சுருதிகன், பி.ஜனகன்,எஸ்.ஆர்ஜன், ரி.குகராம்,வி.அபராஜிதன்,பி.மதீஷ், எஸ்.பிரவீன், ரி.கிரிஷ்மன், ஜி.சங்கீர்த்தன், எம்.ஜனோஷன், எம்.விசாகன், என். தன்னஹறன், பி.அக்ஷயன், ஆர். ஷன்ஜித், வி.தரனீகரன், இ.ராம்குமார், ஜெ.கிருஷாந், ஆர்.தஸ்வின், ஆர்.கிஷான், எ.நேர்திகன், ஜி.ஷகனன், கே.தர்ஷந், ஆர்.ஜெகராம், எஸ். பிரேமஜீசன்,எம்.கவின்,எஸ். பவிசன், எஸ். அஷ்வின்.

**8ஏசி**

ஆங்கிலமொழி

ஆர். மதுரியன், எஸ்.அனுவர்ஜிதன், எஸ்.அயுசன், கே. ஜனோஜன், எஸ். ஷாஹிசன்,

தமிழ் மொழி

பி.திஷாந்,ஜி.ரக்ஷிதன்,ரி.அபிலக்சன்,எ.அகீசன், எஸ். அக்ஷயன்.

## யா/உடுவில் மகளிர் கல்லூரி

**9ஏ**

எஸ்.ராகவி, ஆர்.நிஹேதா, ஜெ.ஹேதுஷா, கே.அன்னஷனி,

**8ஏபி**

எஸ்.கேஷாயினி, சி.ஹம்ஷவர்ஷினி, எஸ்.ஆதிரை

**8 ஏசி**

எ.தீபிகா, வி.ஷர்மி.

## யா/வட்டு இந்துக் கல்லூரி

**9ஏ**

கா.பிங்ஹாலன்,த.தனுஸ்கா,

**8ஏபி**

ஸ்ரீ. சங்கவி

**8ஏசி**

கு.லக்சிகன், நே.ஆரணி

## யா/அருணோதயக் கல்லூரி

**9ஏ**

ஆர்.மேனுஷா

**8ஏபி**

ஜி.கஜானி, ரி.கௌசல்யா, கே.ஷங்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கட்டுக்கடங்காத டெங்கு கணக்கெடுப்பில் தகவல்

(கொழும்பு)

நடப்பாண்டில் இதுவரை 45 ஆயிரத்து 756 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டதுடன் நாடு முழுவதும் டெங்கு பரவும் அபாயம் கொண்ட சுகாதார அதிகாரி பிரிவுகளின் எண்ணிக்கை 112 ஆக உயர்ந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது. இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.நடப்பு ஆண்டில் இதுவரை 633 பாடசாலைகள் விசேட ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் இவ் ஆய்வுகளின் போது. 263 பாடசாலை வளாகங்களில் நுளம்புக் குடம்பிகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

பாடசாலைகள் தவிர, அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் ஆகியவையும் நுளம்புகள் பெருகும் பொதுவான இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. (க-8)

# போதைப் பொருட்களுடன் 798 பேர் கைது

(கொழும்பு)

முழு நாடுமே ஒன்றாக என்ற நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்துக்கமைய நேற்றுமுன் தினம் சனிக்கிழமை மாத்திரம் 798 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி நடவடிக்கைக்கமைய 540 கிராம் ஐஸ் போதைப்பொருள்,258 கிராம் ஹெரோயின், 1கிலோ 341கிராம் கஞ்சா மற்றும் 1352 போதை மாத்திரைகள் ஆகியன அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்களில் 5 சந்தேகநபர்களுக்கு எதிராக தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும்போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள சந்தேகநபர்கள் 3 பேர் மறுவாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (8)


## வீடு வாடகைக்குத் தேவை

அலுவலகப் பயன்பாட்டிற்கு பலாலி,
கே.கே.எஸ் வீதி அண்மித்த உரும்பிராய்,
இணுவில், கொக்குவில், கோண்டாவில்
போன்ற இடங்கள் விரும்பத்தக்கது. (2439)

தொடர்பு: 077 684 7187


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி. டொரின் சகாயநாயகம்
அவர்களின் பாசமிகு தாயார்
அமரர்.

### மொனிக்கா பாக்கியநாதர்

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து
ஆழ்ந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் பிரிவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய.
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (2441)

தோற்றம்: 1943.05.05
மறைவு: 2026.06.18

அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள்,
கல்வி சாரா ஊழியர்கள்.
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

## மணிவிழா வாழ்த்து

22.06.2026



திரு. சண்முகநாதன் வேலழகன் (S.L.P.S.I)

( ஓய்வு நிலை அதிபர்
- யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

இன்று அகவை அறுபதில்
கால்பதிக்கும்
ஓய்வு நிலை அதிபர்
திரு.சண்முகநாதன் வேலழகன்
அவர்களுக்கு மனப்பூர்வமான
மணிவிழா
வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர் :


பூ.ஸ்ரீகாந்தராசா,
திரு.அ.சியாமளருபன்,
வி.லிங்கேஸ்வரன்,
சி.சிவராம்,
சி. சிறீரங்கன்,
ஜெ.ஜோன்கியூபேட்,
து. முகுந்தன்,
திரு.திருமதி.சிவலிங்கம் இராஜினிதேவி,
திரு.திருமதி.கேசவன் ஜீவாஜினி,
திருமதி.ந.துளசி,
திருமதி.சி.குகனேஸ்வரி (மஞ்சு),
திருமதி.தயா திலகேசன்,
செல்வி.ந.யோகேஸ்வரி.

(7881, 7891)

# யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு நன்கொடை வழங்கல்



நாவலர் இந்து தமிழ் கலவன் பாடசாலையின் முன்னாள் முகாமையாளர் அமரர் முருகேசு சுவாமிநாதர்



வலிகாமம் கிழக்கு தென்பகுதி கோப்பாய் விவாக, பிறப்பு, இறப்பு முன்னாள் பதிவாளர் அமரர் சுவாமிநாதர் சுப்பிரமணியம்

1872ஆம் ஆண்டு ஆறுமுக நாவலர் அவர்களால் கோப்பாய் மத்தியில் சைவப்பிரகாச வித்தியாசாலை எனும் பெயரில் ஆண்கள் பாடசாலை அமைக்கப்பட்டது. பெண்களின் கல்வியின் அவசியத்தை உணர்ந்த அமரர் முருகேசு சுவாமிநாதர் அவர்கள், நாவலர் பாடசாலையின் எல்லையில் இருந்த தனது 'வெல்லம்பிட்டிக்' காணியின் ஒரு பகுதியில் கோப்பாய் சரஸ்வதி வித்தியாசாலை என்னும் பெண்கள் பாடசாலையை 1910ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தன்று சேர்.பொன்.இராமநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆரம்பித்தார். 1913ஆம் ஆண்டு அரசாங்கத்தின் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகவும் அதனைப் பதிவுசெய்ததுடன், 26.11.1913 அன்று தனது 1 1/2 பரப்புக் காணியையும் அன்பளிப்பாக வழங்கினார். ஆறுமுக நாவலர் அவர்களது மறைவிற்குப் பின்னர், நாவலர் தரும பரிபாலக சபையின் தலைவர் த.கைலாசபிள்ளை அவர்களின் வேண்டுகோளினை ஏற்று, இரண்டு பாடசாலைகளையும் இணைத்து கோப்பாய் நாவலர் இந்து தமிழ் கலவன் பாடசாலை என்னும் பெயரில், அரசின் அனுமதியுடன், ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் நடாத்தி, அதன் முகாமையாளராகவும் கடமையாற்றியிருந்தார். யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக, 1927ஆம் ஆண்டு பன்ன வேலைக் கைத்தொழில் பயிற்சியினை அமரர் முருகேசு சுவாமிநாதர் அவர்கள் இப்பாடசாலையில் ஆரம்பித்ததுடன் அதனை குடிசைக் கைத்தொழில் இலாகாவிலும் பதிவு செய்திருந்தார்.

அமரர் முருகேசு சுவாமிநாதர் அவர்களின் மகனான அமரர் சுவாமிநாதர் சுப்பிரமணியம் அவர்களுக்கு பாடசாலைக்கு மேற்குப் புறமாக 5 பரப்பு காணியும், கிணறு மற்றும் பயிர்களும் இருந்தன. 1986ஆண்டில் இக்காணியானது பலாத்காரமான முறையில் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அப்போதைய பாடசாலை நிர்வாகம் இக்காணியில் தமது பாடசாலைக்கான விரிவாக்கலினை எந்த உரித்துமின்றி மேற்கொண்டு வந்தது.

2013ஆம் ஆண்டு, தம்மிடமிருந்து அடாத்தாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட காணியின் உரிமை கோரி அமரர் சுவாமிநாதர் சுப்பிரமணியம் குடும்பத்தவர்களால் கௌரவ யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 25.11.2025ஆம் திகதி கௌரவ மன்றில் வடக்கு மாகாண கல்வி நிர்வாகத்தினர், மேற்படி காணியானது அமரர் சுவாமிநாதர் சுப்பிரமணியத்திற்கு உரியது என்பதை ஏற்றுக் கொண்டனர். அதன் அடிப்படையில், கல்வித் தேவைக்காகவும், சமூக விருத்திக்காகவும், மேற்படி காணியை அமரர் சுவாமிநாதர் சுப்பிரமணியத்தின் குடும்பத்தினர் பாடசாலைக்கு அன்பளிப்பாக இன்றைய தினம் வைபவ ரீதியாகக் கைளிக்கின்றனர்.

(C-5830) சுவாமிநாதர் சுப்பிரமணியம் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பாரதம்

# ஈரானைத் தொடர்ந்து வடகொரியா பக்கம் திரும்பும் ட்ரம்ப்!

### உலக அரசியலில் பரபரப்பு



(வோஷிங்டன்)

ஈரானுடன் போடப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தத்தை அடுத்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது கவனத்தை இனி வட கொரியாவின் அணு ஆயுதத் திட்டங்களின் பக்கம் திருப்பத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பிரான்சின் ஏவியன்-லெ-பெய்ன்ஸ் நகரில் நடைபெற்று வரும் ஜி7 உச்சிமாநாட்டின் இரவு விருந்தின் போது, "வடகொரியா விவகாரத்தில் கவனம் செலுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது" என ட்ரம்ப் தன்னிடம் தனிப்பட்ட முறையில் தெரிவித்ததாக தென்கொரிய ஜனாதிபதி லீ ஜே மியுங் செய்தியாளர்கள் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் வடகொரியா அண்மை காலமாக நெருக்கமான இராணுவ உறவை வளர்த்து வருவதால், அதற்கு எதிராக தற்போது விதிக்கப்பட்டுள்ள சர்வதேசத் தடைகள் பயனற்றதாகிவிட்டன என்று சுட்டிக்காட்டிய லீ ஜே மியுங், இந்த விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீடு அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஹனோய் நகரில் ட்ரம்ப் - கிம் ஜாங் உன் இடையே நடைபெற்ற உச்சி மாநாடு தோல்வியில் முடிந்த பிறகு, வடகொரியா தன்னை ஒரு நிரந்தர அணுஆயுத நாடாக அறிவித்துக் கொண்டதுடன், அணு எரிபொருள் தயாரிப்பையும் தீவிரப்படுத்தியுள்ளது.

தற்போது ஈரான் உடனான பதற்றம் தணிந்துள்ள நிலையில், ட்ரம்ப் மீண்டும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், புதிய வெளியுறவுக் கொள்கையை வகுக்கவும் இந்த உச்சிமாநாட்டைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது சர்வதேச அரங்கில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (3)

# ஹார்முஸ் நீரிணை கட்டுப்பாட்டிற்

## அமெரிக்கா அதிர

(வோஷிங்டன்)

**ஹார்முஸ் நீரிணை ஈரானின் கட் இல்லை என்று அமெரிக்க மத்திய கட் தின் ஊடக பேச்சாளர் அல் ஜசீரா அரபு குத் தெரிவித்துள்ளார்.**

உலகளாவிய கடல்சார் வணிகப் போக்குவரத்திற்கு மிக முக்கியப் பாதையாக விளங்கும் ஹார்முஸ் நீரிணையில், கப்பல் போக்குவரத்து எவ்வித தடையுமின்றி சீராகத் தொடர்வதை உறுதி செய்வதற்காக அமெரிக்கப் படைகள் அந்த பகுதியைத் தீவிரமாகக் கண்காணித்து வருவதாக அதன் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

தெற்கு லெபனானில் இஸ்ரேல் தொடர்ந்து நடத்தி வரும் தாக்குதல்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், ஹார்முஸ் நீரிணை மூடப்படுவதாக ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை முன்னதாக அறிவித்திருந்தது.

எனினும், இது குறித்து அமெரிக்க மத்திய கட்டளையகம் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையில் சர்வதேச

# 'புகைப்படம் எடுக்க கெஞ்சினேனா...' ட்ரம்பை விளாசிய இத்தாலிய பிரதமர்



(ரோம்)

பிரான்சில் நடைபெற்ற ஜி7 உச்சிமாநாட்டின் போது., இத்தாலி பிரதமர் ஜோர்ஜியா மெலோனி தன்னிடம் வந்து "புகைப்படம் எடுக்க கெஞ்சினார்" என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறிய கருத்து, இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையே பெரும் அரசியல் மோதலை உருவாக்கியுள்ளது.

ட்ரம்பின் இந்த கூற்றை முற்றிலுமாக மறுத்துள்ள இத்தாலி பிரதமர் மெலோனி, இது முற்றிலும் கற்பனையான ஒரு கதை என்று சாடியுள்ளார்.

மேலும், "மேற்கத்திய நாடுகளின் எதிரிகளிடம் மென்மையான போக்கைக் கடைப்பிடிக்கும் அமெரிக்க ஜனாதிபதி, நட்பு நாடுகளிடம் இப்படி நடந்து கொள்வது வருத்தமளிக்கிறது. ஆனால் அவர் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும், நானோ அல்லது இத்தாலியோ யாரிடமும் ஒருபோதும் பிச்சை எடுக்க மாட்டோம்" என்று தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆவேசமாகப் பதிவிட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஈரான் போருக்கு இத்தாலி எதிர்ப்பு தெரிவித்தது, மற்றும் போப் ஆண்டவரை ட்ரம்ப் விமர்சித்தபோது மெலோனி அதற்கு கண்டனம் தெரிவித்தது போன்ற அடுத்தடுத்த சம்பவங்களால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மேலும் ஏற்கனவே விரிசலடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# இன்று பதவி விலகும் பிரித்தானிய பிரதமர் ஸ்டார்மர்?



(லண்டன்)

பிரித்தானியப் பிரதமர் கீர் ஸ்டார்மர் இன்று திங்கட்கிழமை தனது பதவியில் இருந்து விலகக் கூடும் எனவும், அவர் விலகுவதற்கான கால அட்டவணையை வெளியிட வாய்ப்புள்ளதாகவும் "தி அப்சர்வர்" நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், அவர் இன்னும் தனது அரசாங்கப் பணிகளில் முழு கவனத்துடன் இருப்பதாக அரசுத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாராளுமன்ற இடைத்தேர்தலில் ஸ்டார்மரின் அரசியல் எதிரியான ஆண்டி பர்ன்ஹாம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, பிரதமருக்கான அரசியல் அழுத்தம் கணிசமாக அதிகரித்துள்ளது.

2024ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தொழிற்கட்சியை ஒரு மாபெரும் வெற்றிக்கு வழிநடத்திய கீர் ஸ்டார்மர், அதன் பின்னர் ஏற்பட்ட தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு




கடல்வழிப் பாதையூடான பாதுகாப்பான போக்குவரத்து எவ்விதப் பாதிப்புமின்றித் தொடர்ந்ததாக தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்று ஒரே நாளில் 55 வணிகக் கப்பல்கள் இந்த நீரிணையைக் கடந்து சென்றுள்ளன.

இதன் மூலம் பெருமளவிலான சரக்குகளும், 17 மில்லியனுக்கும் அதிகமான மசகு எண்ணெய் பீப்பாய்களும் உலகச் சந்தைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இந்தநிலையில், ஈரானுடன் எட்டப்பட்ட இடைக்கால ஒப்பந்தத்தின் அனைத்து விதிகளும் முறையாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய அமெரிக்கப் படைகள் அந்தப் பகுதியில் தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுபடும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)



## மக்கள் போராட்டத்தின் எதிரொலி; பொலிவியாவில் அவசரநிலை பிரகடனம்

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பு நிலவி வருகிறது.

அரசுக்கு எதிராக பொதுமக்கள் இணைந்து தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் போராட்டக்காரர்கள் நாட்டின் முக்கிய நெடுஞ்சாலைகளை முழுமையாக முடக்கியதால் உணவு, எரிபொருள் மற்றும் மருந்துப் பொருட்கள் ஏற்றி வந்த லொறிகள் ஆங்காங்கே ஸ்தம்பித்து நின்றன. இதனால் ஒட்டுமொத்த நாடும் கடும் தட்டுப்பாட்டால் நிலைகுலைந்தது.

இதற்கிடையே, போராட்டக்காரர்களிடம் அரசு நடத்திய பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது.

இதனால், பொலிவியா ஜனாதிபதி ரோட்ரிகோ பாஸ், நாடு முழுவதும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அவசர நிலையைப் பிரகடனம் செய்வதாக அறிவித்துள்ளார். இந்த அவசர நிலை அடுத்த 90 நாட்களுக்கு அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த அவசரநிலை சாலை மறியல்களை அகற்றி நாட்டின் ஒழுங்கை மீட்டெடுக்க இராணுவத்திற்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது. அத்துடன் வன்முறையில் ஈடுபடுவோர்மீது கடும் சட்ட நடவடிக்கை பாயும் என அந்நாட்டு அரசு எச்சரித்துள்ளது.

அவசரநிலை பிரகடனம் அமுல்படுத்தப்பட்டு உள்ளதால் பொலிவியாவில் பரபரப்பு சூழல் நிலவுகிறது. (3)

ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் கொள்கை மாற்றங்கள் காரணமாக மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியைச் சந்தித்துள்ளார்.

கிரேட்டர் மான்செஸ்டர் மேயராக இருந்த 56 வயதான ஆண்டி பர்ன்ஹாம், கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மேக்கர்ஃபீல்ட் இடைத்தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றத்திற்குள் நுழைந்துள்ளார். இது பிரதமரின் தலைமைத்துவத்திற்கு நேரடி சவாலை ஏற்படுத்தியுள்ளது.

தனது பதவி இனி நீடிக்காது என்ற தீர்மானத்துக்கு வந்துள்ள ஸ்டார்மர், தனது உத்தியோகபூர்வ இல்லமான செக்கர்ஸ் இல்லத்தில் தனது மனைவியுடன் இறுதி முடிவு குறித்து ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

தொழிற்கட்சியின் பெரும்பாலான மூத்த தலைவர்கள் ஆண்டி பர்ன்ஹாமே ஸ்டார்மருக்குப் பிறகு பிரதமராக வருவதற்கு அதிக வாய்ப்புள்ளதாகக் கருதுகின்றனர். பர்ன்ஹாம் பிரதமராகப் பொறுப்பேற்றால், தற்போதைய நிதி அமைச்சர் ரேச்சல் ரீவ்ஸை பதவியிலிருந்து நீக்கத் திட்டமிட்டுள்ளதாக "தி டைம்ஸ்" நாளிதழ் குறிப்பிட்டுள்ளது. (3)




(பெய்ரூட்)

இஸ்ரேல் மற்றும் லெபனான் நாடுகளுக்கு இடையேயான புதிய சுற்று அமைதிப் பேச்சுவார்த்தை இந்த வாரம் அமெரிக்காவின் வோஷிங்டன் டி.சி-யில் நடைபெறவுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லா அமைப்பிற்கும் இடையே லெபனானில் ஒரு புதிய தற்காலிகப் போர்நிறுத்தம் எட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே இந்த அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை லெபனானில் தொடர்ந்து நீடிக்கும் மோதல்கள் சீர்குலைக்க அச்சுறுத்திய நிலையில், இந்த அமைதிப் பேச்சுவார்த்தை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, லெபனான் ஜனாதிபதி ஜோசப் அவுனிடம் தொலைபேசி வாயிலாகப் பேசியபோது, இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தை மட்டுமே லெபனானின் பொருளாதார மீட்புக்கும், தொடர் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் இருக்கும் ஒரே வழி என்று வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து ஜூன் 23 மற்றும் 25 ஆகிய திகதிகளில் இரு இறையாண்மை நாடுகளின் அரசாங்கங்களும் ஒரு நிலையான அமைதியை நோக்கி முன்னேறுவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளன. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கல்சியம் சத்துள்ள பாரம்பரிய உணவுகளும் அவற்றின் மருத்துவ முக்கியத்துவமும்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

என்புகள் தான் எமது உடம்பினது அஸ்திவாரம் நாம் நிற்பதற்கு, ஓடுவதற்கு, இருப்பதற்கு, நடப்பதற்கு எல்லாவற்றிற்கும் எமது என்புகளுடைய உறுதி அவசியம். எனவே என்புகளை எப்பவும், உறுதியாகவும் பலமாகவும் வைத்திருக்க வேண்டும்.

தினமும் எமது உடம்பிற்கு 1000-1500 மில்லிகிராம் கல்சியம் தேவைப்படுகிறது. என்புகள் பலவீனமடைவதற்கு முக்கியமான காரணம் கல்சியம் சத்துள்ள முக்கியமான உணவுகளை அன்றாட வாழ்வியலில் சேர்க்காதது தான் காரணம்.

முதலாவதாக கல்சியம் என்றாலே நம் நினைவிற்கு வருவது பசுவின் பால். 200 மில்லி பாலில் 236 மில்லி கிராம் கல்சியம் உண்டு. பாதாம் பால் 200 மில்லி குடித்தால் 90 மில்லிகிராம் கல்சியம் கிடைக்கிறது.

மற்றையது முக்கியமானது தயிர் 150 மில்லி தயிரில் 207 மில்லிகிராம் கல்சியம் கிடைக்கிறது அடுத்து பாசிப்பருப்பு, கடலைப்பருப்பு போன்றவை 200 கிராம் எடுத்தால் 40 மில்லிகிராம் கல்சியம் சத்து கிடைக்கிறது. சுண்டல் வகைகளான வெள்ளை சுண்டல், மண்ணிற சுண்டல், கொண்டல் வகைகள் 200 கிராம் எடுத்தால் 99 மில்லிகிராம் கல்சியம் கிடைக்கிறது. பீன்ஸ் வகைகள் எதுவாக எடுத்தாலும் 200 கிராம் சாப்பிடும் போது 100 கிராம் கல்சியம் சத்து கிடைக்கிறது அடுத்து பச்சைப் பட்டாணி 50 மில்லி கிராம் சாப்பிட்டாலும் 10 மில்லிகிராம் கல்சியம் சத்துக்கிடைக்கிறது. ஒரு முட்டை சாப்பிட் டால் 27 மில்லிகிராம் கல்சியம் சத்து கிடைக்கின்றது. 120 கிராம் சிக்கின் சாப்பிட்டால் 17 மில்லி கிராம் கல்சியம் சத்து கிடைக்கிறது. அசைவ உணவுகளில் இருந்து ஓரளவு கல்சியசத்து கிடைக்கின்றது. கீரை



வகை களில் கரட். போன்ற வற்றிலும் ஓரளவு கல்சியம் சத்து கிடை க்கிறது. பூசணி விதை 100 கிராமில் 46 கிராம் கல்சியம் சத்துத்தான் உண்டு.

ஆனால் சியாவிதைகள் 100 கிராமில் 529 மில்லிகிராம் கல்சியம் சத்து உண்டு. முக்கியமாக 100 கிராம் எள்ளில் 975 மில்லி கிராம் அளவு எள்ளு உண்டு. இதனால் தான் பாரம்பரிய மருத்துவத்தில் எள்ளு சேர்ந்த உணவுகள் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார், வளரும் குழந்தைகளின் உணவுகளில் எள்ளு முக்கிய இடம் பெறுகிறது.

சூரியகாந்தி விதைகள் 100 கிராம் 114 மில்லிகிராம் அளவு கல்சியம் சத்து கிடைக்கிறது.

120 கிராம் அகத்திக் கீரையில் 1130 மில்லி கிராம் அளவு கல்சியம் சத்துக்கிடைக்கிறது. 100 கிராம் கறிவேப்பிலையில் 830 மில்லிகிராம் கல்சியம் சத்துக்கிடைக்கிறது.

100 கிராம் முருங்கைக் கீரையில் 440 மில்லிகிராம் கல்சியம் சத்து கிடைக்கிறது. பொன்னாங்காணிக்கீரை 100 கிராம் சாப்பிட்டால் 510 மில்லி கிராம் அளவு கல்சியம் சத்துக் கிடைக்கிறது. அடுத்து முக்கியமாக தொற்றா நோயங்களின் தாக்கம் உள்ளவர்கள் சிறு தானியங்களை எடுத்துக் கொள்ளலாம்.

100 கிராம் குரக்கனில் 344 மில்லிகிராம் கல்சியம் சத்து கிடைக்கிறது. ஆனால் எதுவாக இருந்தாலும் எண்ணெய் சேர்க்காமல் மேற்படி உணவுகளை பயன்படுத்தும் போது தான் கல்சியம் சத்து அப்படியே எமது உடம்பிற்கு கிடைக்கும். கம்பு 100 கிராம் 43 மில்லிகிராம் கல்சியம் சத்து கிடைக்கிறது.

தினையில் 31 மில்லி கிராம் கல்சியமும் கிடைக்கின்றது. சிறுதானியங்களுள் குரக்கன் கல்சியம் சத்துக்காக அவசியமான உணவாகும். அடுத்து பழங்களை எடுத்துக் கொண்டால் ஓரஞ்சு 150 கிராமில் 60 மில்லிகிராம் கல்சியம் சத்து கிடைக்கிறது நெல்லிக்கனி 100 கிராமில் 22 மில்லி கிராம் கல்சியம் சத்துக் கிடைக்கிறது. ஆனால் உலர்ந்த அத்திப் பழத்தில் 60 கிராமில் 96 மில்லிகிராம் கல்சியம் சத்துக் கிடைக்கிறது.

உலர்ந்த திராட்சை (பிளம்ஸ்) 40 கிராமில் 31 மில்லி கிராம் கல்சியம் சத்து கிடைக்கிறது. 30 கிராம் பாதாம் பருப்பில் 75 மில்லிகிராம் கல்சியம் சத்து கிடைக்கிறது. இப்போது ஓரளவு கல்சியம் சத்துள்ள உணவுகளைப் பற்றி விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தினமும் இந்த உணவுகளில் இருந்து 1000-1500 மில்லி கிராம் அளவு எடுத் துள்ளோமா என கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே தனியாக பால், தயிர், சிக்கின் வகைகளோடு மட்டும் கல்சியம் சத்து காணாது எனவே கீரை வகைகள், விதைகள் போன்ற வற்றையும் கல்சியம் சத்து நிறைவாக கிடைப்பதற்காக அன்றாட உணவில் கட்டாயமாக சேர்த்துக்கொள்ள வேண்டும் பொதுவாக உங்களுடைய வயது 30ஆகும் வரை என்புகளின் உறுதித்தன்மை அதிகரித்து பின்பு வயது ஆகஆக படிப்படியாக என்புகளின் உறுதித்தன்மை இயற்கையாகவே குறைய ஆரம்பிக்கும்.

ஆனாலும் சிறுவயதிலிருந்தே அந்த கல்சியம் சத்து உள்ள முக்கியமான உணவுகளை தினமும் சேர்த்துக் கொண்டு வந்தால் 30 வயதில் bone mass அதாவது என்புகளில் அடர்த்தித் தன்மை செறிவாக இருக்கும் இவர்களுக்கு 30 வயதிற்கு பின்பு என்புத்தேய்மானம் மிகவும் குறைவாகவே ஏற்பட்டு கொண்டு போகும்.

அத்துடன் இவ் என்புத் தேய்மானங்களை குறைப்பதற்கு சிறுவயதில் இருந்தே உடற் பயிற்சி, நடைப்பயிற்சி போன் றவற்றை கட்டாயமாக மேற்கொள்ளவேண்டும். இப்படி மேற்கொண்டு வரும் போது என்புகளின் உறுதித் தன்மை ஓரளவு பாதுகாக்க முடியும். தனிய என்புகளின் உறு திக்கு கல்சியம் சத்து இருந் தால் போதாது உயிர்ச் சத்து C உள்ள உணவுகளும் சேர்த்து எடுத்துக்கொள்ள வேண் டும்.

இதனால் தான் ஓரஞ்சு நெல்லிக்காய் உலர் அத்திப் பழம் போன்றவையும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கொலாஜின் கிடைக்கிறது. அத்துடன் உயிர்ச்சத்து D யும் தேவைப் படுகிறது. உயிர்ச்சத்து D மேற்கூறிய உண வுகளில் இருந்தும் கிடைக்கின்றது. எனவே ஊட்டச்சத் துள்ள மேற்படி உணவுகள் என்புகளில் உறுவிக்கும் அடர்த்திக்கும் அவசியமானதாகும்.

# இராசிபலன்

22.06.2026
ஆனி 8, திங்கட்கிழமை
அட்டமி முன்னிரவு 8.42 மணிவரை
உத்தரம் பிற்பகல் 3.33 மணிவரை

சுப நேரம் -11.54-1.24 மணிவரை
இராகு காலம் -7.24-8.54 மணிவரை
ஆனி உத்தர தரிசனம்

சந்திராஷ்டமம்-
அவிட்டம், சதயம்.

வளவன்

**மேஷம்**: இலாபநோக்கோடு பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கலகலப்பான செய்திகள் காலை நேரத்திலேயே வந்து சேரலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**: பிள்ளைகளின் தேவை அறிந்து பூர்த்தி செய்வீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், செய்தொழிலிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்**: பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்**: கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்**: புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர் சந்திப்பில் உள்ளம் மகிழ்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி**: விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டு Tïï^, பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்**: நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு**: கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், புதிய பொருள் சேர்க்கை யுண்டு, கடமையில் முன்னேற்ற முண்டு, செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மகரம்**: வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்**: கவலைகள் தீர இஷ்டதெய்வத்தை வழிபட வேண்டிய நாள், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாகச் செயற்படலாம், பிரயாண பயமுண்டு.

**மீனம்**: சொந்த பந்தங்கள் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், சுப காரிய பேச்சுக்களில் முன்னேற்ற முண்டு, நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

முயற்சி செய்வது தோல்வியிலும் முத்திரை பதிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கண்களுக்கு தெரியாத சிறு பூச்சிகள்-தரும் பெரிய தாக்கம்

## முள்முருக்கு கழலைகள் (Erythrina Galls) வட இலங்கையில் புதிய சூழலியல் இடைத்தொடர்பின் அறிமுகம்

*இக்கட்டுரை ஜூன் மாதம் 6 ஆம் திகதி கொண்டாடப்பட்ட உலக பீடைகள் தினத்தை (World Pest Day) முன்னிட்டு பிரசுரிக்கப்படுகின்றது-*



பேராசிரியர்
திருமதி R. ஞானேஸ்வரன்,
யாழ்ப்பாண பூச்சியல் சங்கம்,
விலங்கியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்



செல்வி. M. ஸ்சொப்னா,
BSc, (Hons)

முள்முருக்கு எமக்கு மிகவும் பரிச்சயமான ஒரு மரம். இதன் விஞ்ஞான பெயர் Ery thrina variegata என்பதாகும். எரித்ரினா (Erythrina) என்பது உலகில் சுமார் 130 இனங்களைக் கொண்ட பபேசீயே (Fabaceae) என்னும் குடும்பத்தை சேர்ந்ததாகும். இலங்கையில் Erythrina variegata இன் இரண்டு வகைகள் மட்டுமே காணப்படுகின்றன. இலை வடிவத்தைப் பொறுத்து அவற்றை வேறுபடுத்தலாம். ஒன்று முழுமையாக பச்சை இலையைக் கொண்டிருக்கும் மற்றொன்று பச்சை இலைகளுடன் மஞ்சள் பட்டைகளும் இருக்கும். தமிழில் உள்ள உள்ளூர் பெயர்கள் பச்சை இலை வகை "முள் முருக்கு", மற்றும் பச்சை-மஞ்சள் பட்டை கொண்ட வகை "கல்யாண முருக்கு" என்றழைக்கப்படும்.

கல்யாணமுருக்கு இலங்கையின் வடபகுதிவாழ் மக்களிடையே மிக முக்கியமான தாவரமாக கருதப்படுகிறது.

ஏனெனில், இந்து சமய கலாசாரத்தில் கல்யாண நிகழ்வின் போது "கன்னிக்கால் ஊன்றுதல்" ஒரு சம்பிரதாய நிகழ்வாக நடைபெறுவது வழக்கம், அந்நிகழ்விலே கல்யாணமுருக்கு இரு வீட்டிலும் நடப்படுவது வழக்கம். இது அந்த தம்பதியருக்கு செழிப்பையும் பிள்ளை வளத்தையும் வழங்கும் என நம்பப்படுகிறது.

இதனைத்தவிர பல்வேறு மருத்துவப் பயன்களுடன் கால் நடைகளின் உணவாகவும் காற்றுத்தடையாகவும் வேலிகளை அமைப்பதற்கும் இயற்கை வளங்களை (நீர், நிலம்) பாதுகாப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இந்த மரத்தின் எல்லா பகுதிகளும் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன. பட்டை மற்றும் இலைகள் வயிற்றுப் பிரச்சனைகள், anti abortion சிகிச்சை, காய்ச்சல், மற்றும் கல்லீரல் சம்பந்தமான தொற்று களை நிவர்த்தி செய்ய பயன் படுகின்றன. இலைச்சாறு காது வலியை நிவர்த்தி செய்யக் காதில் ஊற்றப் பயன்படுகிறது. மேலும் இரத்த சுத்திகரிப்பு, மாதவிடாய் ஒழுங்கு, மற்றும் குடல் பூச்சிகளை ஒழிப்பதிலும் தோல் பிரச்சினைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

பூச்சிகள் (Insects) என்பன பூமியில் பரவலாக காணப்படும் உயிரினக்குழுவாகும். இவை காடுகள், வயல்கள், நீர்நிலைகள், வீடுகள் என எல்லாச்சூழலிலும் வாழ்கின்றன. அவை எல்லா விதமான உணவு பழக்கங்களையும் கொண்டிருக்கின்றன பல தாவரவுண்ணிகளாகவும் சில விலங்குண்ணிகளாகவும் மேலும் சில அழுகலுண்ணிகளாகவும் காணப்படுகின்றன. ஒரு சில பூச்சிகள் பயன்தரு பயிர்களைச் சேதப்படுத்துவதால் பீடைகள் (pests) என அழைக்கப்படுகின்றன. பல பூச்சிகள் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை உணவாக்கிக் கட்டுப்படுத்தும் இயற்கை எதிரிகளாக (Natural enemies) செயற்படுகின்றன.

2006 ஆம் ஆண்டு பிரதாபன் என்பவர் இலங்கையில் முள்முருக்கு மரங்களில் ஏற்பட்ட அசாதாரண வீக்கங்கள் (கழலைகள்-Galls), Quadrastichus erythrinae என்ற ஒருவகை குளவிப் (Wasp) பூச்சிகளின் தாக்கத்தினால் ஏற்படுகின்றன என்று தனது ஆராய்ச்சி மூலம் கண்டறிந்தார். இவ் அசாதாரண வளர்ச்சி (Gall) தாவரத்தின் எல்லா பகுதிகளிலும் பரவலடைந்து இறுதியில் முழுத்தாவரத்தையும் அழித்து விடுகிறது. சமீபத்திய ஆய்வுகளின் படி (2023-2024), வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் உள்ளிட்ட 5 மாவட்டத்திலும் இத்தாக்கம் பரவலாக உள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

Quadrastichus erythrinae என்னும் இச்சிறிய, அண்ணளவாக 1-2 mm நீளமுடைய இக் குளவி (Wasp) முதன்முதலில் 2003 இல் Mascarene தீவுகள் மற்றும் சிங்கப்பூரில் பதிவாகியதாக ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பின்னர் இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவு, தென்கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் தீவுகளில் விரைவாக பரவியது. இது 2005 இல் முதன்முறையாக ஹவாயின் (Hawaii) Oahu தீவுகளில் கண்டறியப்பட்டது. சில மாதங்களுக்குள் ஹவாய் தீவுகளில் உள்ள முக்கிய இடங்கள் முழுவதும் பரவியது.

பெண் பூச்சி தங்களின் சூலிடப்படுத்தியை (ovipositor) பயன்படுத்தி, Erythrina இனத்தைச் சேர்ந்த மரங்களின் இளம் இலைகள், தண்டுகள், இலைக்காம்புகள் (petioles) பூக்கள் மற்றும் வித்துக்கள் (seeds) ஆகியவற்றிற்குள் முட்டைகளை இடுகின்றன. இவற்றிலிருந்து வெளிவரும் புழுக்கள் (larvae) உணவாக தாவர திசுக்களை உண்ணுவதால், பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேலதிக வீக்கம் ஏற்பட்டு அசாதாரண வளர்ச்சி (galls) உருவாகிறது. Galls இன் உள்ளே குழவியின் இளம் வாழ்க்கை நிலைகள் வளர்ச்சி அடைந்து, இறுதியில் நிறையுடலிப் பூச்சிகள் gall இினூடாக துளையிட்டு வெளியே வருகின்றன. இதனால் பாதிக்கப்பட்ட தாவரப் பகுதிகள் சிதைவடைந்து, தாவரத்தின் வளர்ச்சி மற்றும் வலிமை குறைகிறது.


Quadrastichus erythrinae அதிக அளவில் தாக்கினால், இலைகளும் தளிர்களும் சுருண்டு போய் இறுதியில் தாவரம் இறப்பதற்கும் காரணமாகிறது. பெண் பூச்சி ஆண் பூச்சியை விட பெரியது, நிறம் கருப்பு-பழுப்பு கலந்தது. ஆண் பூச்சி சிறியதும் வெளிர் நிறமுடையதும் ஆகும். இரண்டிற்கும் சிறிய உடல் அமைப்பும், ஒத்த இறக்கை அமைப்பும் காணப்படுகிறது.

உண்மை இவ்வாறாக இருக்க பொதுமக்களிடையே ஒரு தவறான நம்பிக்கை உலவி வந்துள்ளது. அதாவது இவ் அசாதாரண வளர்ச்சியை யானைக்கால் நோய் அல்லது வைரஸ் கிருமியின் தாக்கம் என்று நம்பி தமது தோட்டங்களில் இருந்த மரங்களை வெட்டியழித்தனர். மேலும் சிலர் இந்த நோய் மனிதருக்கும் பரவிவிடக்கூடும் என அஞ்சினர்.

அதேசமயம், அதிகமான மக்கள் நினைப்பது என்னவெனில் எல்லா பூச்சிகளும் தீங்கு விளைவிப்பவையே என்று. ஆனால் அதுவும் தவறு.

இயற்கை என்பது எப்போதும் தானாகவே சமநிலையில் இருக்கவே முயற்சி செய்து கொண்டிருக்கும். ஒவ்வொரு விலங்குக்கும் அவற்றுக்குரிய தனிப்பட்ட அல்லது பொதுவான இயற்கை எதிரிகள் காணப்பட்டு அவற்றின் குடித்தொகையை சமநிலைப்படுத்துவதில் முக்கிய பங்கெடுக்கின்றன. இதை வழமையான உணவு சங்கிலி மற்றும் உணவு வலை மூலம் அறிந்து கொள்ளலாம்.

இந்த முள்முருக்கு கழலை உருவாக்கும் குளவிக்கும் பல இயற்கை எதிரிகள் காணப்படுவதாக அறியப்பட்டுள்ளது. எமது சூழலில் அவ்வாறான ஒரு இயற்கை எதிரியான இன்னொரு குளவியை எமது ஆராய்ச்சியின் போது கண்டறிந்தோம்



முள்முருக்கு மரங்களில் குளவிகள் ஏற்படுத்திய கழலைகள்

(12 ஆம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 5

காவியத் தொடர்

1069





சோழநாட்டு மக்கள் தம்மை ஆதரிப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்" இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வானதி. "அக்கா! என் பெரியப்பாவுக்குத் திடீரென்று பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

"ஏன் வானதி அப்படிச் சொல்கிறாய்? வெகு காலமாகப் பலர் மனத்தில் இருந்த விடயத்தையே உன் பெரியப்பா இப்போது பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். பழுவேட்டரையர்கள் 'மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட வேண்டும்' என்ற முயற்சி தொடங்கியிருப்பதினால் கொடும்பாளூர் மன்னரும் திருக்கோவலூர் மலையமானும் இவ்விதம் வெளிப்படையாகச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்"

"ஆம், தாயே! திருக்கோவலூர் மலையமான் கூட இதற்குள் ஒரு பெரிய சைன்யத்துடன் கடம்பூர் கோட்டைக்குச் சமீபம் வந்திருப்பார். என்னிடம் அவர் பேசியதிலிருந்தே அவ்வாறு தான் ஊகித்தேன். முதன் மந்திரிக்கும் தகவல் கிடைத்திருக்கிறது"

"ஆனால் இப்போது நான் அறிந்திருக்கும் செய்திகள் அவர்கள் இருவருக்கும் தெரியாது. அவர்கள் இரண்டு பேருடனும் நான் பேசி உள்நாட்டுச் சண்டை நேராமல் தடுத்தாக வேண்டும். எப்படிச் செய்யப் போகிறேனோ, தெரியவில்லை"

"தாயே ! நிலைமை இப்போது மிகவும் முற்றிப் போய்விட்டது. இனிமேல் ஒரு பெரிய பாரத யுத்தம் நடந்தே தீரும் போலிருக்கிறது"

"இதைப் பாரத யுத்தம் என்று கூறியது ரொம்ப சரி, திருமலை! இப்போது யுத்தம் மூண்டால் அது ஒரு சகோதரச் சண்டையாகத்தான் இருக்கும். உற்றார் உறவினருக்குள்ளே நிகழும் சர்வநாச யுத்தமாக இருக்கும். வானதி! இதைக் கேள்! என் பாட்டனாரின் தகப்பனார் புகழ்பெற்ற பராந்தக சக்கரவர்த்தி, பழுவேட்டரையர் குலத்தில் பெண் கொண்டார்.

அவருடைய மகள், என் சிறிய பாட்டி, கொடும்பாளூரின் அரசரை மணந்து கொண்டார். என் பாட்டனார் அரிஞ்சயர் கொடும்பாளூர்ப் பெண்ணை மணந்து கொண்டார். என் தந்தையோ திருக்கோவலூர் மலையமான் மகளை மணந்திருக்கிறார். இப்படி இந்த மூன்று குல மன்னர்களும் எங்கள் குலத்துடன் நெருங்கிய உறவு பூண்டவர்கள். ஒன்றுக்குள் ஒன்றாகக் கலந்து போனவர்கள். ஆயினும் அவர்கள் இப்போது கச்சை கட்டிக் கொண்டு சண்டைக்கு ஆயத்தமாகி வருகிறார்கள்! இந்த விதியை என்னவென்று சொல்கிறது இவர்களுடைய சண்டையினால் சோழ ராஜ்யமே அழிந்துவிடும் போலிருக்கிறது!"

"அக்கா! எனக்குப் அதைப் பற்றியெல்லாம் கவலை இல்லை. எப்படியாவது சண்டை போட்டுக் கொண்டு சாகட்டும். ஆனால் இதில் என் பெயரை என் பெரிய தகப்பனார் எதற்காக இழுக்க வேண்டும்? உடனே திரும்பிப்போய் என் பெரியப்பாவைப் பார்த்து சண்டை பிடிக்கவேண்டும் என்று தோன்றுகிறது"

"அதனால் என்ன பயன், கண்ணே? நீ சொல்வதை உன் பெரிய தகப்பனார் கேட்க மாட்டார். நீயும் நானும் சேர்ந்து மன்றாடினாலும் பயன்படாது.


(தொடரும்)

(11 ஆம் பக்கம் தொடர்ச்சி)

இந்த Aprostocetus sp. என்னும் பயனுள்ள இயற்கை எதிரியான (Natural enemy) குளவி அண்ணளவாக 0.5-2mm நீளமுள்ளது. இந்த சிறிய ( parasitoid ) ஒட்டுண்ணிப் பூச்சி மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிற உடலுடன் காணப்படும். பெண் பூச்சியின் மேல் வயிற்றுப் பகுதி கருமையாகவும், ஆண் பூச்சியின் உடல் பெரும்பாலும் மஞ்சளாகவும் இருக்கும். உடல் நிறமும் இறக்கை அமைப்பும் இதை அடையாளம் காண உதவுகின்றன.

இந்த ஒட்டுண்ணி (parasitoid) குளவி இலங்கையில் முதல் தடவையாக வடக்கு மாகாணத்தின் எல்லா மாவட்டங்களிலும் கண்டறியப்பட்டுள்ளது. மிகவும் ஆச்சரியமான விடயம் என்னவென்றால் இந்த அசாதாரண வளர்ச்சியிற்கு காரணமான பூச்சியும் அதனை தடுக்க உதவும் இந்த பூச்சியும் ஒரே குடும்பத்தை (Family : Eulophidae ) சேர்ந்தவை என்பதேயாகும். இவ்வாறான இயற்கை எதிரிகள் ஆபிரிக்கா, ஹவாய் போன்ற நாடுகளில் தீங்கை தரும் Quandrastichus erythrinae பூச்சியை கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்துள்ளது.


பீடைகளின் பரவலைக் குறைக்க,





Quadrastichus erythrinae- முள்முருக்கு மரங்களில் கழலைகளை ஏற்படுத்தும் குளவி

இவ்வாறான உயிரியல் கட்டுப்பாடு (biological control) முறை மிகவும் நம்பிக்கையான மற்றும் நிலைத்து நீடித்திருக்கும் வழி ஆகும்.

Eurytoma erythrinae (Hymenoptera: Eurytomidae) இது Aprostocetus. sp போல ஒரு parasitoid ஆகும். இது Quadrastichus erythrinae யின் இளந்தை நிலைகளை (larval stages) தாக்குகிறது. இது ஹவாயில் 2008 இல் வெளியிடப்பட்டது. இது 85% இற்கும் மேல் கழலைத் தாக்கங்களைக் குறைத்ததோடு 2 வருடங்களில் மரங்களின் பாதிப்பு 33% இற்கு குறைந்தது.




Aprostocetus sp. கழலைகளை ஏற்படுத்தும் குளவிகளை அழிக்ககூடிய ஒட்டுண்ணிக் குளவி

தொற்று அதிகமாக இருந்தால், மரத்தின் இளம் இலைகள் மற்றும் கிளைகளை அகற்றி, தொற்றை குறைக்கலாம் ஏனெனில் அவை இளம் இலைகளுக்குள்ளேயே முட்டைகளைப் போடுவதை அதிகம் விரும்புகின்றன.

இரசாயன கட்டுப்பாட்டு (Chemical Control) முறையும் உள்ளது, ஆனால் அதிக அளவில் பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்துவது ஒட்டுண்ணி (parasitoid) குளவி போன்ற பல பயனுள்ள உயிரினங்களை அழித்தொழிக்கிறது. இதனால் சமநிலை குழம்பி பிரச்சினை மேலும் அதிகரிக்கக்கூடும் அல்லது வேறு பிரச்சினை உருவாகக்கூடும்.

எனவே, எல்லா பூச்சிகளையும் அழிக்க வேண்டிய அவசியமில்லை. பல பூச்சிகள் இயற்கையின் பாதுகாவலர்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த ஆய்வு, நிலையான ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையின் (IPM) அவசியத்தை வலியுறுத்துகிறது. இயற்கையின் சமநிலையை பாதுகாப்பதன் மூலம் விவசாயத்தையும் சுற்றுசூழலையும் காப்பாற்ற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பரீட்சைப் பெறுபேறுகள் நாம் கற்றறிய வேண்டியவை

2025 ஆம் ஆண்டுக்குரிய சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. பரீட்சைப் பெறுபேறுகள் குறித்த பகுப்பாய்வுகள் பல வழிகளாலும் வெளியாகியுள்ளன.

பகுப்பாய்வுகளின் படி, வடக்கு மாகாணம் கடைசிக்கு முதல் இடத்தில் இருப்பதை அறிய முடிகிறது.

ஒரு காலத்தில் கல்வி என்றால் அது யாழ்ப்பாணம் என்ற நிலைமை இருந்தது. ஆனால் இப்போது எங்கள் கல்வி நிலை அடிமட்டத்திற்குச் சென்று விட்டது.

ஆம், பாடசாலைக் கல்வி. இதற்கு மேலாக தனியார் கல்வி நிறுவனங்கள் என்பன இயங்கு நிலையில் இருந்தாலும் வடக்கின் கல்வி அடைவு மட்டம் மிகவும் வீழ்ச்சிக் கட்டத்தில் இருப்பது உண்மையில் வேதனைக்குரியது.

தவிர, 2025 ஆம் ஆண்டின் சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றில் நாம் கடைசி நிலையில் இருக்கின்றோம் என்ற மனநிலை இன்னும் ஒரு சில வாரங்களில் மறைந்து – மறந்து போய்விடும்.

பின்னர் ஆசிரியர், அதிபர் இடமாற்றம். ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சண்டித்தன அறிக்கைகள் என்ற கலாசாரத்திற்குள் எங்கள் பாடசாலைக் கல்வி வீழ்ந்து விடும்.

பிறகென்ன ஆசியர்கள் மத்தியில்; ஆசிரியர் தொழிற்சங்கங்களின் அறிக்கைகளும் அவர்களின் செவ்விகளுமே பேசு பொருளாகும். இடைவேளைகளில் அதிகாரிகளுக்கு எதிரான பாடவிதானமும் பாடசாலைகளில் நடந்தாகும்.

இஃது பாடசாலைகளில் நடக்க, கல்வி வலயங்களில் இருக்கக்கூடிய அதிகாரிகள் தமக்குள் முறைசாரா மாநாடு நடத்துவர். அதில் தமக்கு வேண்டிய அதிபர் ஆசிரியர்களைப் போற்றுவர். மற்றவர்களைத் தூற்றுவர்.

இதனிடையே இரண்டுக்குள்ளும் அகப்படாத அதிபர், ஆசிரியர்கள் தப்பிப் பிழைத்துக் கொள்வர்.

நிலைமை இதுவென்றால், நம் மாணவர்கள் தம் பாடு. அதிபர், ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்கின்ற மனநிலையில் இருந்து அவர்கள் விடுபட்டுள்ளனர்.

கையடக்கத்தொலைபேசிகளும் தொலைக்காட்சித் தொடர்களும் முகநூல் பதிவுகளும் தகவல் பரிமாற்றங்களும் அவர்களை மீளா அடிமைகளாக்கியுள்ளன.

பாடசாலைகளும் தனியார் கல்வி நிறுவனங்களும் குறிப்பிட்ட மாணவர்களுக்குப் பொழுதுபோக்கும் இடமாகிவிட்டன.

நிலைமை இதுவாக இருக்கையில், தமது பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் அடித்தால் – பிள்ளைகளை அதட்டினால், பொலிஸில் முறைப்பாடு செய்து சாதனை படைக்க காத்திருக்கும் பெற்றோரும் பாடசாலை நிர்வாகத்தில் மூக்கை நுழைத்து எல்லாவற்றையும் குழப்பி அடிக்கும் பழைய மாணவப் பெருந்தகைகளுமாகச் சேர்ந்து எங்கள் கல்வியை நடுத் தெருவில் நிறுத்தியுள்ளனர்.

இங்கு நாம் கூறும் குற்றச்சாட்டுக்கள் பொதுவானவையன்று. அஃது சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு மட்டுமே உரியவை.

ஏனெனில் எங்கள் கல்விக்காக தங்களை அர்ப்பணிக்கும் அதிபர்கள் – ஆசிரியர்கள் – மாணவர்கள் – பெற்றோர்கள் – பழைய மாணவர்கள் – கல்வி அதிகாரிகள் – நலன்விரும்பிகள் என்ற மேன்மக்களின் அர்ப்பணிப்பான பாடுகள்தான், எமக்குக் கிடைத்த நல்ல பெறுபேறுகள் என்பதும் இங்கு குறித்துரைக்கப்பட வேண்டியவை.

### ஈஸ்டர் தாக்குதல் நடந்தபோது
# பாதுகாப்புத் துறையிடம் ஒருங்கிணைப்பு இருக்கவில்லை
## அன்றைய பிரதமர் ரணில் பகிரங்கம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புச் சம்பவத்தின் போது பாதுகாப்புத் துறையினரிடையே முறையான ஒருங்கிணைப்பு இருக்கவில்லை என்றும் அலரி மாளிகைக்குச் செல்ல வேண்டாம் என அதிகாரிகளுக்கு அன்றைய ஜனாதிபதியால் உத்தர விடப்பட்டிருந்ததாகவும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதுடன் குண்டுத்தாக்குதல் அரங்கேறிய உடனே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தனது கைபேசிக்கு நேரடியாக அழைத்து இரங்கல் தெரிவித்ததோடு, எப்.பி.ஐ புலனாய்வு அமைப்பின் ஒத்துழைப்பை பெற்றுக் கொடுத்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற பொது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்தில், முன்னாள் ஜனாதிபதியும் தாக்குதல் சம்பவத்தின் போது பிரதமராக இருந்தவருமான ரணில் விக்கிரமசிங்க, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இதுவரை வெளிவராத பல உண்மைகளை அம்பலப்படுத்தியுள்ளார்.

தாக்குதல் நடந்த போது அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் இல்லாததால், ரணில் விக்கிரமசிங்கவே நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார்.

தாக்குதல் சம்பவம் அறியக்கிடைத்த உடனேயே பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளை அலரி மாளிகைக்கு வருமாறு தான் பணித்ததாகவும், அப்போது அங்கு வந்திருந்த அப்போதைய சட்டமா அதிபர் ஜெயந்த ஜயசூரிய உள்ளிட்ட அதிகாரிகள், 'அலரி மாளிகைக்குச் செல்ல வேண்டாம்' என்று ஜனாதிபதி தமக்கு உத்தரவிட்டதாகக் கூறியதாகவும் ரணில் தெரிவித்தார்.

இதனால் பாதுகாப்பு அமைச்சிற்கே தாம் செல்ல நேரிட்டது என்றும் அங்கு அப்போதைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தனவின் அறையில் அதிகாரிகள் கூடி விவாதங்களில் ஈடுபட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அங்கு நிலவிய குழப்பகரமான சூழலில், ஒருபுறம் ஹேமசிறி பெர்னாண்டோவும் மறுபுறம் மற்றுமொரு அதிகாரியும் ஒருவருக்கொருவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தனரே தவிர, யார் என்ன செய்கிறார்கள் என்ற ஒருங்கிணைப்பு எவரிடமும் இருக்கவில்லை.

பாதுகாப்புத் துறையினரிடையே ஒற்றுமை இல்லை என்பதை உணர்ந்த பின்னர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தகவல்களைப் பகிர்ந்து விசாரணைகளை ஆரம்பித்ததாக குறிப்பிட்ட ரணில், பாதுகாப்பு அமைச்சில் நிலவிய கடுமையான குழப்பம் காரணமாக அன்றைய தினம் மாலைக்கூட்டத்தை முப்படைப் பிரதானியின் அலுவலகத்திலேயே நடத்த வேண்டியேற்பட்டது என்றார். (ந-7)

### யாழ். பல்கலைக்கழக
## பரமேஸ்வரன் ஆலயத்தில் இன்று சங்காபிசேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பார்வதி சமேத பரமேஸ்வரன் கோவில் மகா கும்பாபிசேக தின சங்காபிசேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று அதிகாலை 5 மணி முதல் ஆனி உத்தர அபிசேகம் நடைபெற்று காலை 6 மணிக்கு நவோத்தர சஹஸ்ர சங்காபிசேகம் நடைபெறும்.

தொடர்ந்து காலை 8 மணிக்கு பூசை வழிபாடுகளும் காலை 9 மணிக்கு திருக்கல்யாண வைபவமும் நிறைவாக சுவாமி திருமஞ்சத்தில் திருவீதி உலா வரும் காட்சியும் இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு அன்னதானமும் இடம்பெறும். (8)

## தங்கமுலாம் பூசப்பட்ட துப்பாக்கி விவகாரம்
### துமிந்தவுக்கு அழைப்பாணை

(கல்கிசை)

தங்கமுலாம் பூசப்பட்ட ரி-56 ரக துப்பாக்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவை மீண்டும் ஒரு சந்தேகநபராகப் பெயரிட்டு கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாக அழைப்பாணை விடுக்குமாறு கல்கிசை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஹவலொக் வீடமைப்புத் தொகுதியில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், பெண் ஒருவரின் பையிலிருந்து தங்கமுலாம் பூசப்பட்ட ரி-56 துப்பாக்கியை மீட்டமை தொடர்பான வழக்கிலிருந்து 2025 ஜூலை மாதம் 29 ஆம் திகதி துமிந்த திசாநாயக்க விடுவிக்கப்பட்டிருந்தார்.

இருப்பினும் பயங்கரவாத ஒழிப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் இந்தத் துப்பாக்கி தொடர்பாக மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் அறிக்கைகளுக்கு அமைய, துமிந்த திசாநாயக்கவை ஒரு சந்தேகநபராகப் பெயரிட முடியும் என சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்த நிலையிலேயே இந்த உத்தரவு நேற்று முன்தினம் கல்கிசை நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## நீரில் மூழ்கி மாணவன் பலி

புத்தளம் மாவட்டம் ஆராச்சிகட்டுவ, செங்கல்ஓயா சாலையின் மணல் முனைப் பகுதியில் நீராடச் சென்ற 13 வயது மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஆராச்சிகட்டுவ வைரன்கட்டுவப் பகுதியைச் சேர்ந்த சிலாபம் மஹா வித்தியாலயத்தில் 9 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் எஸ்.ஜே.எம். லகிந்து சாமிக என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ந-7)

## பேக்கரியில் தீ விபத்து

(வெல்லம்பிட்டி)

வெல்லம்பிட்டி நகரில் உள்ள பேக்கரி ஒன்றில் நேற்று (21) மாலை தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தீப்பரவலைக் கட்டுப்படுத்த இரண்டு தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பேக்கரியில் நேற்று மாலை 4.45 மணியளவிலேயே இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பில் வெல்லம்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆனி மாத இராசி பலன்கள்
# (15.06.2026 - 16.07.2026வரை)

## வளர்ச்சி அதிகரிக்க வழிபாடு தேவை



**தனுசு இராசி வாசகர்களே!**

பராபவ வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் உங்கள் ராசிநாதன் குரு. அங்கே உச்சமும் பெற்றிருக்கிறார்.இது அவ்வளவு நல்லதல்ல. எல்லாவற்றிலும் தடை, தாமதம் வந்து கொண்டேயிருக்கும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். நினைத்தது ஒன்றும், நடப்பது ஒன்றுமாக இருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். வீண் பழிகளுக்கு ஆளாக நேரிடும். வரவு வருவதற்கு முன்பே செலவு காத்திருக்கும். மாதம் முழுவதும் மகிழ்ச்சி குறையாமல் இருக்க சிந்தித்து செயற்பட வேண்டும்.

**ரிஷப -செவ்வாய்**

ஆனி மாதம் 5ஆம் திகதி (19.6.2026) அன்று செவ்வாய், ரிஷப ராசிக்குச் செல்கிறார். உங்கள் ராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதியதியானவர் செவ்வாய். பஞ்சம - விரயாதிபதியான அவர், சத்ரு ஸ்தானத்திற்கு வரும் பொழுது எதிரிகளின் பலம் குறையும். இருப்பினும் மனக்கவலை அதிகரிக்கும். உறவினர்கள் பகையாக மாறலாம். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும். சேர்த்து வைத்த சேமிப்புகள் கரையும். பிள்ளைகள் வழியில் பிரச்சினைகளும், விரயங்களும் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்களைப் பிரித்துக் கொள்வதில் தாமதம் ஏற்படும்.

**சிம்ம சுக்ரன்**

கடக ராசியில் சஞ்சரிக்கும் சுக்ரன், ஆனி 21 ஆம் திகதி (05.07.2026) அன்று சிம்ம ராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன்.அவர் பாக்கிய ஸ்தானத்திற்கு வரும்போது, பெற்றோர் வழியில்ஆதரவு கிடைக்கும்.

கற்ற கல்விக்கேற்ற வேலை அமையும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே, வேறு வேலைக்கு செல்லலாமா? என்று நினைத்தவர்களுக்கு, வெளிநாடு அல்லது வெளி மாநிலத்தில் இருந்து வேலைக்கான அழைப்புகள் வரலாம். கூட்டுத்தொழில் புரிவோர் தனித்து இயங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். எதிர்பாராத இடமாற்றம்நன்மை தரும்.

**சனி வக்கிரம்**

ஆனி 31ஆம் திகதி (15.7.2026) அன்று மீன ராசியில் சனி வக்கிரம் பெறுகிறார். உங்கள் ராசிக்கு 2, 3 ஆகிய இடங் களுக்கு அதிபதியானவர் சனி. தன ஸ்தானம் மற்றும் சகாய ஸ்தானத்திற்கு அதிபதியான அவர் வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல.

எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. குடும்ப பிரச்சினை அதிகரிக்கும், கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றத்தை சந்திக்க நேரிடும்.

உங்கள் ராசி மற்றும் 6,10 ஆகிய இடங்களில் சனியின் பார்வை பதிகிறது. எனவே ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். மருத்துவச் செலவு கூடும். எந்த ஒரு காரியத்தை செய்யும்போதும் மனக் கலக்கம் உருவாகும்.




உத்தியோகத்தில் உங்களிடம் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். குறிப்பாக யாரையும் நம்பி செயற்பட முடியாத நேரம் இது. கூட்டுத் தொழில் புரிவோருக்கு கவலை அதிகரிக்கும். பங்கு தாரர்கள் விலகுவதாகச் சொல்லி அச்சுறுத்திய மனநிலை மாறவேண்டுமானால் மந்தன் எனப்படும் சனியை வழிபடவேண்டும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு போட்டிகள் அதிகரிக்கும். தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு மறைமுக எதிர்ப்புகளால் மனக்கலக்கம் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. கலைஞர்களால் அதிக முயற்சி எடுத்து தான் வெற்றி பெற முடியும். மாணவ - மாணவிகளுக்கு மறதி அதிகரிக்கும். பெண்களுக்கு வரவை விட செலவு கூடும். உறவினர் பகை உருவாகும்.

இம்மாதம் சனீஸ்வரர் வழிபாடு சஞ்சலத்தை தீர்க்கும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:-** ஜூன்: 20, 21, 24, 25, ஜூலை: 3, 4, 8, 9.

**மகிழ்ச்சி தரும் வண்ணம்:-** கரும்பச்சை.

**குரு - சுக்ரன் சேர்க்கை**

கடக ராசியில் உச்சம் பெற்ற குருவோடு, 15.6.2026 முதல் 4.7.2026 வரை சுக்ரன் இணைந்து சஞ்சரிக்கிறார். தேவ குரு- அசுரகுரு இருவரும் அஷ்டமத்தில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. மனதிலே இனம் புரியாத கவலை குடிகொள்ளும். முன்னேற்றப் பாதையில் சிக்கல்கள் அதிகரிக்கும். நணபர்கள் நம்பிக் கைக்குரிய விதம் நடந்து கொள்ள மாட்டார்கள். பொது வாழ்வில் உள்ளவர்கள் வீண் பழிக்கு ஆளாக நேரிடும். பிள்ளைகளாலும் பிரச்சினைகள் வரலாம்.

ஜோதிடக் கலைமணி
**சிவல்புரி சிங்காரம்**



**மகர இராசி வாசகர்களே!**

பராபவ வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார்.மாதக் கடைசியில் வக்ரமும் பெறுகிறார். ஆனால் தற்சமயம் பெயர்ச்சியான குரு பகவான் உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்தில் சஞ்சரித்து உங்கள் ராசியைப் பார்க்கிறார். குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கேற்ப நல்ல சந்தர்ப்பங்கள் பலவும். இம்மாதம் உங்களைத் தேடி வரப்போகிறது.பகைவர்கள் உங் களை விட்டு விலகுவர். புதிய முயற்சிகளில் வெற்றிகாணப் போகிறீர்கள் தொழில், உத்தியோகம் போன்றவற்றில் நீங்கள் எது நடக்க வேண்டும் என்று சிந்தித்தீர்களோ அது நடைபெறும்.

பொருளாதார நிலை திருப்தி தரும்.

**ரிஷப - செவ்வாய்**

**ஆனி மாதம் 5ஆம் திகதி (19.6. 2026) அன்று செவ்வாய், ரிஷப ராசிக்குச் செல்கிறார். உங்கள் ராசிக்கு** 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பஞ்சம ஸ்தானத்திற்கு வரும் பொழுது, நல்ல பலன்கள் இல்லம் தேடி வரும். வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டை பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள்.அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் கூடும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி நீங்கள் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அவர்களது திருமணம் சம்பந்தமாகவோ, வெளிநாடு சென்று படிப்பது சம்பந்தமாகவோ, வேலை கிடைப்பது சம்பந்தமாகவோ செய்யும் முயற்சி பயன்தரும்.

கடக ராசியில் சஞ்சரிக்கும் சுக்ரன், ஆனி 21 ஆம் திகதி (5.7.2026) அன்று சிம்ம இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு 5,10ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன்


## உச்ச குரு பார்வையால் உயர்வு

அஷ்டமத்திற்கு வருவது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளாலும், பெற்றோராலும் மனக்கசப்பு தரும் தகவல் வரலாம். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. விரயங்கள் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி குறையும். கூட்டாளிகளின் போக்கை உங்கள் மனநிலை ஏற்றுக் கொள்ளாது. இக்காலத்தில் எதிலும் கவனத்துடன்செயல்படுவது நல்லது.

**சனி வக்கிரம்**

**ஆனி 31 ஆம் திகதி (15.7.2026)** அன்று மீன ராசியில் சனி வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிநாதனாகவும், தனாதிபதியாகவும் விளங்குபவர் சனி பகவான். அவர் வகிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. அனைத்து செயற்பாடுகளிலும் தட்டுப்பாடுகளும், தடைகளும் வந்து கொண்டேயிருக்கும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். குடும்ப பிரச்சினை கூடும்.

உங்கள் இராசிக்கு 5, 9, 12 ஆகிய இடங்களில் சனியின் பார்வை பதிகிறது. எனவே பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. நல்ல இடத்தில் வேலை பார்த்து வந்த பிள்ளைகள், அதை விட்டு விலகிக்கொள்ள நேரிடும். பாகப் பிரிவினை இழுபறி நிலையில் இருக்கும். பகை உணர்வு மிக்கவர்கள் பக்கத்தில் இருப்பர். பயணங்களால் பிரச்சினைகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பணி மாற்றம் அல்லது பணி நீக்கம் செய்யப் படும் அளவிற்கு பிரச்சினைகள் வரலாம்.




**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு** புதிய பொறுப்புகள் கிடைக்கும். வியாபாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு முக்கிய நபர்களின் ஆதரவு உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். கலைஞர்களுக்கு தள்ளிப் போன ஒப்பந்தங்கள் தானாக வந்து சேரும். மாணவ - மாணவிகளுக்கு, பெற்றோர் - ஆசிரியர்களின் ஆதரவு உண்டு. பெண்களுக்கு சுபச்செய்திகள் வந்து சேரும். பொருளாதார நிலை உயரும்.

இம்மாதம் பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:-** ஜூன் 22, 23, 26, 27,
ஜூலை: 5, 6, 11, 12,

**மகிழ்ச்சி தரும் வண்ணம்:-** மஞ்சள்.

**குரு - சுக்ரன் சேர்க்கை**

கடக ராசியில் உச்சம் பெற்று சஞ்சரிக்கும் குருவோடு, 15.6.2026 முதல் 4.7.2026 வரை சுக்ரன் இணைந்து சஞ்சரிக்கிறார். தேவகுரு-அசுரகுரு இணையும் இந்த நேரத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற் கான சூழ்நிலை உருவாகும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப் படுவீர்கள். குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சம்பாதிக்கும் யோகம் **உண்டு. வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள்.**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது மன்னிப்பு...

செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் மற்றும் 1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சோமரத்ன ராஜபக்ஷ வெளியிட்டுள்ள தகவல்கள் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கின் பிரதான குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள சோமரத்ன ராஜபக்ஷ தொடர்பில், அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம கடந்த ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் கிருஷாந்தி கொலை மற்றும் செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் தனது கணவரிடம் உள்ள தகவல்களை மீண்டும் விசாரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 8ஆம் திகதி மற்றும் இவ்வாண்டு ஜனவரி 9 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் சோமரத்ன ராஜபக்ஷவைச் சந்தித்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் ஒன்றையும் அவர் அதிகாரிகளிடம் கையளித்திருந்ததுடன் செம்மணி மனிதப் புதைகுழி மற்றும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஏற்கெனவே பல தகவல்களை வழங்கியிருந்த போதிலும், இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியிருந்தார். மேலும் சுயாதீன விசாரணைக் குழுவொன்றை நியமித்து முழுமையான விசாரணை நடத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் செம்மணி மனிதப் புதைகுழி அமைந்துள்ள பகுதியை அண்மையில் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, "நான் சோமரத்ன ராஜபக்ஷவை நேரில் சந்திக்கவில்லை. ஆனால் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் அவரைச் சந்தித்துள்ளார். அப்போது தனக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கினால் உண்மைகளை வெளிப்படுத்துவதாக அவர் கூறியிருக்கிறார். உண்மையைச் சொல்ல விரும்புபவர் இவ்வாறு நிபந்தனை விதிப்பாரா?" எனக் கேள்வி எழுப்பினார். (ந-7)

## நாளை மறுதினம்...

வருகை தரவுள்ளனர்.

இதன்படி, அவர்கள் நாளை மறுதினம் 24 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் ஈவன் பெபஜோர்ஜியு உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்தப் பயணத்தில் இணையவுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது, சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் இலங்கையின் சமீபத்திய பொருளாதார வளர்ச்சியை மதிப்பீடு செய்யவும் இலங்கையின் பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தின் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடவும் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## டெங்கு நோயாளர்...

யில் நாட்டில் 46,037 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவின் பதில் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

தற்போது நாளாந்தம் 600 முதல் 650 வரையான டெங்கு நோயாளர்கள் பதிவாகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 12,196 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவித்த வைத்தியர் கபில கன்னங்கர, இது ஒரு மாதத்திற்குள் பதிவான அதிகூடிய டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை எனவும் சுட்டிக்காட்டினார்.

மாகாண ரீதியாக ஒப்பிடுகையில், மேல் மாகாணத்திலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அது 51.75 சதவீதமாகும்.

இதேவேளை தென் மாகாணத்தில் 16.16% ஆகவும், சப்ரகமுவ மாகாணத்தில் 9.35% ஆகவும் மத்திய மாகாணத்தில் 7.23% ஆகவும் மற்றும் கிழக்கு மாகாணத்தில் 5.05% ஆகவும் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ந-7)

*(மற்றுமொரு செய்தி உள்ளே)*

## நீதியரசர்களை...

வர எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அவ் ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் நீதியரசர்களுக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு எதிராகத் தீர்க்கமான அரசியல் நகர்வை மேற்கொள்வது குறித்து எதிர்க்கட்சிகள் தீவிர கலந்துரையாடலில் ஈடுபட்டு வருகின்றன.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து சபாநாயகரிடம் கையளித்த கடிதத்திற்கு, ஜனாதிபதி அல்லது அரசாங்கத் தரப்பிலிருந்து இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கப்பெறவில்லை.

இச்சூழ்நிலையில், எதிர்வரும் பாராளுமன்றக் கூட்டத்தொடர் வாரத்தில் அரசாங்கத்திற்கு எதிராகத் தீர்க்கமான அரசியல் நகர்வை மேற்கொள்வது குறித்து எதிர்க்கட்சிகளின் கவனம் திரும்பியுள்ளது.

முன்னதாக, அரசாங்கத்திற்கு எதிராக எடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்கிடையில் விசேட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் பலம் போதியதாக இல்லாததால், ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப் பிரேரணையைக் கொண்டுவருவது கடினம் என்பதே எதிரக் கட்சிகள் அனைத்தினதும் கருத்தாக உள்ளது.

இதன் காரணமாக, அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர தற்போது பொதுவான இணக்கப்பாடு ஏற்பட்டு வருவதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி எதிர்வரும் பாராளுமன்ற வாரத்தில் இது குறித்த இறுதி முடிவு எடுக்கப்பட்டு, நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தயாரித்தல் மற்றும் அதனைச் சமர்ப்பித்தல் தொடர்பான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றுள்ளது. (ந-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத — திகதி 2026.06.21 — சீட்டிழுப்பு இலக்கம் 6225 — Z 2 3 5 6 4 8 — அத சம்பத Z 5 6 4 8 — சீட்டிழுப்பு இலக்கம் 0800

சுப தவசக் — திகதி 2026.06.21 — சீட்டிழுப்பு இலக்கம் 6341 — சிம்மம் 26 39 54 — 2230

தன நிதானய — திகதி - 2026.06.21 — சீட்டிழுப்பு இலக்கம் - 2255 — F 21 30 38 66 F — ஞாயிறு போனஸ் இலக்கம் 4579

மெகா பவர் — திகதி 21/06/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2573 — T 19 11 18 63 80

ஜய — திகதி 2026.06.21 — சீட்டிழுப்பு இலக்கம் 0493 — X 3 8 5 2 — ஞாயிறு போனஸ் இலக்கம் 1193

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4467 — சீட்டிழுப்பு திகதி 21.06.2026 — F 03 23 29 40 — தேசிய லொத்தர் சபை

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.06.21 — சீட்டிழுப்பு இலக்கம் 1534 — கன்னி 05 31 43 58 கன்னி

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி தனசம்பத — 21.06.2026 — வெற்றி வாரம் 0933 — A 2 9 7 5 8 6 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,036,837.20 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3199 — 25000 பணப் பரிசு 30447 — சீட்டிழுப்பு திகதி 2026.06.21 — தினம் திங்கட்கிழமை — 21 30 51 59 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 136,823,125.60 — DLB

சனிதா — திகதி 21.06.2026 — வெற்றி வாரம் 5360 — 09 11 27 71 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,341,239.60 — செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 50,000/- பணப்பரிசு 19611 — DLB

சசிரி — வெற்றி வாரம் 1029 — சீட்டிழுப்பு திகதி 21.06.2026 — திங்கட்கிழமை — 06 25 45 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,653,960.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4911 — சீட்டிழுப்பு திகதி 21.06.2026 — தினம் திங்கட்கிழமை — 06 10 45 62 — துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,326,050.80 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — P 12 08 11 32 73 — 2375 — 21.06.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.298,995,497.60 — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் 3025 — சீட்டிழுப்பு திகதி 2026.06.21 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,800,179.20 — 23 51 55 57 H — DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

TECHNO WORLD
INNOVATIVE IDEAS OPEN NEW WORLD

# TECHNO WORLD
## தொழில் நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

# A/L 2028

## A/L தொழில்நுட்பப் பிரிவு

ஆரம்பம் : 24.06.2026 (புதன்கிழமை)

நேரம் : மாலை 3.30 மணி

A/L 2027 வகுப்புக்கள் நடைபெறுகின்றன

தொடர்புகளுக்கு :

(C-5890)

**077 017 5346**



## வெறுப்பை நிராகரித்து மனிதநேயத்தை உயர்த்துவோம்

ஒவ்வொரு தகவலும் பகிரப்பட வேண்டியது அல்ல.

தீர்மானத்தை மீறிய உணர்ச்சிகளால் வெறுப்பான தகவல்கள் வேகமாக பரவுகின்றன.

மக்களை உயர்த்தும், சமூகங்களை வலுப்படுத்தும் மற்றும் மரியாதையை வளர்க்கும் தகவல்களை தெரிவு செய்து பகிருங்கள்.

நாம் விழிப்புணர்வுடன் வெறுப்பை நிராகரிப்போம்.

இந்த செய்தி SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

(7775)



## காணி விற்பனைக்கு

வவுனியாவில் வைரவபுளியங்குளத்தில் 10 பரப்பு அறுதி உறுதிக் காணியும், கணேசபுரத்தில் 1.5 ஏக்கர் உறுதிக் காணியும் விற்பனைக்கு உண்டு. (2440)

தொடர்புக்கு

**077 524 5913**



## மணமகன் தேவை

1. புலோலி இந்து, 1994, ரோகிணி, MBBS Doctor, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (58977)
2. நாகர்கோவில், இந்து, 1998, கார்த்திகை, Bachelor of Accounting, Accountant New Zealand Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (58369)
3. கரவெட்டி, இந்து, 1997, மகம், Bachelor of Arts District Social Case Manager, Germany Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55857)
4. சுதுமலை, இந்து, 1991, விசாகம், BSc & Bachelors of Nursing Medical Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55115)
5. மானிப்பாய், இந்து, 1989, உத்தராடம், BSc, Doctor, of Medicine, Doctor, USA Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (29980)
6. மாதகல், இந்து, 1990, திருவோணம், BBA, Manager, Germanyல் பிறந்த Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54542)
7. கொக்குவில், இந்து, 1989, சித்திரை Bachelor of (Hons) Pharmacy Technician, Pharmacist, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54533)
8. சரவணை, இந்து, 1993, அஸ்வினி, Software engineering, Software Developer, சிங்கப்பூர் Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54241)
9. காரைநகர், இந்து, 1992, சித்திரை, CIM (UK), MSC in Finance, MBA (UK), MSc.in Strategic Marketing (UK), Phd reading, Finance Administrator and Business Operational Analyst Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54115)
10. கைதடி, இந்து, 1998, விசாகம், Bachelor of law & Bachelor of Arts Pollicy Analyst, New Zealand Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (53788)

(C-5891)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற Websiteஇல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P 077 539 3728
www.thaalee.com 074 359 3104


## செம்மணி...

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் 30ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது 11 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டதுடன் ஒரு பகுதியில் குவியலாக ஒன்பது மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அத்துடன் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட ஏழு மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் நேற்று அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் இதுவரை 405 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 377 மனித என்புக் கூட்டுத்தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-7,33)


## மணமகள் தேவை

பூரட்டாதி நட்சத்திரம் 3ம் பாதம் 1985ம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.

(7887)

தொடர்புகளுக்கு:

**078 576 8558**




## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378,
076 097 3127


# மரண அறிவித்தல்



மலர்வு 18.01.1932

உதிர்வு 20.06.2026

## சங்கரப்பிள்ளை அம்மையப்பர்

(அகில இலங்கை சமாதான நீதவான்,
முன்னாள் எழுதுவினைஞர் மோட்டார் போக்குவரத்து திணைக்களம்,
ஓய்வு பெற்ற ஆசிரியர் - யா/ வட்டு இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, பரந்தன் குமரபுரம் மகா வித்தியாலயம்,
கிளிநொச்சி மகா வித்தியாலயம்,
ஓய்வுபெற்ற உப அதிபர் - யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

யாழ்ப்பாணம் நீராவியடிப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வடக்கு விடு அராலி தெற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை அம்மையப்பர் அவர்கள் கடந்த 20.06.2026 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் காரைக்காலம்மையார் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பர்வதவர்த்தினி ஆகியோரின் அன்பு மருமகனும் சிதம்பரவல்லி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அன்னபூரணி, காலஞ்சென்ற சம்பந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற வைத்திலிங்கம், மேரி, காலஞ்சென்ற மங்கையற்கரசி, காலஞ்சென்ற அரிச்சந்திரன், சங்கரப்பிள்ளை, அபிராமி, குமாரசாமி, சிவமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சந்திரா, சிவகுமாரன், சித்திரா, கௌரி, காலஞ்சென்ற சிவநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபால் சங்கரப்பிள்ளை, தயாபரி, சர்வானந்தன், தேவசேனாதிபதி ஆகியோரின் அன்பு மாமனாரும் விநோதன், வாணி - நீல், அரன், சிவகரன், சிவஜீவன் - ஜயனி, சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆஷா, டிலான் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (23.06.2026) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 10.30 மணியளவில் அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

வடக்கு வீடு,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(7894)

தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media